192.R.C

# செந்தமிழ்ப் பூம்பொழில்

120857

பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# செந்தமிழ்ப் பூம்பொழில்

பொது சன நூலகம்
SEP 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஆசிரியர் :
பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

அச்சுப் பதிவு :
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
யாழ்ப்பாணம்.
1956

120857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை உரை

---

தமிழக மக்கள் முன்னேற்றம் அறிவின் பாலதாகும். அவ்வறிவொளி வீசக் கல்வியே முதற் சாதனமாகும். இவ்வுண்மையுணர்ந்த செட்டிநாட்டரசர் சர். மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் சிதம்பரத்தில் அண்ணாமலை நகரில் நிறுவிய பல்கலைக்கழகம் கிரித்தீபமாக நிலவுதலை யாவரும் அறிவர்.

அப்பெரியாரின் முதற் புதல்வரும், செந்தமிழ்ப் புலவர் புரவலரும், செந்தமிழ் நூல்களில் சிறந்த பண்பாடுடையவரும் ஆகிய இராஜா சர். கலாநிதி உயர்திரு. மு. அ. முத்தையாச் செட்டியாரவர்கள் உதாரகுண நினைவாக இந்நூலை உரிமைப்படுத்துகின்றேன். அவர்கள் செந்தமிழ்மொழி சிறக்கப் புரந்து பல்லாண்டு வாழ்க. சுபம்.

வ. மு. இரத்தினேசுவர ஐயர்

10-9-56.

894.811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

செந்தமிழ்ப் பூம்பொழில் சிறந்திடற் பொருட்டுக்
கந்தழி யாகிக் கருத்துள் நிறைந்த
எந்தை குமரன் இணையடி மலரைச்
சந்ததம் பணிகுவன் தண்ணருள் புரிவரே.

இவ்வுலகத்தில் பல நூற்றுக்கணக்கான மொழிகள் நிலவுகின்றன. அவற்றிற்கெல்லாம் மூலமானவை தமிழ், ஆரியம் ஆகிய இரண்டுமேயாம். தமிழ் இனிமையும் இலக்கண வரம்பும் உடையது. மேனாடரும், வானாடரும் போற்றும் பொற்பு தமிழ்மொழிக்குளது. எனது முன்னோர் கைக்கொண்ட முறையில், நானும் தமிழிலெழுதியும் பேசியும் வருகின்றேன். சில கட்டுரைகள் இத்தருணமும் வெளிவருகின்றன.

அரசாங்கத்தவர் இந்நூலைத் தமிழ்ப்பாடப் புத்தகங்களுள் ஒன்றாக வைப்பார்களென்று நம்புகின்றேன்.

தமிழ்ப்பற்று மீக்கூற்றானே அன்புரை நல்கிய முன்னாள் தபால் தந்திப்பகுதி மந்திரி திரு. சு. நடேசபிள்ளை அவர்களுக்கும், சுன்னாகம் பேராசிரியர் திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (B. A.) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

எனது இச்சிறுபணி பெரிதாக வேண்டி அச்சுவாகனமேற்றி உலாவரச் செய்த சண்முகநாதன் புத்தகசாலை— ஸ்ரீ சண்முகநாத அச்சகம் என்பவற்றின் அதிபர் சி. ச. குமாரசுவாமி அவர்கள் பேருதவியை என்றும் மறவேன்.

சுபம்.

வணக்கம்.

**வ. மு. இரத்தினேசுவர ஐயர்**
*தமிழ்ப்புலவர்.*

*20, பிரவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*10-9-1956.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I

# அணிந்துரை

திரு வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை முறையாகப் பயின்றவர்கள்; செய்யுள் இயற்றுவதிலும், கட்டுரை எழுதுவதிலும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இவர்கள் எழுதிய சில கட்டுரைகள் இப்பொழுது புத்தகரூப மாக வெளியிடப்படுகின்றன. இக்கட்டுரைகள் தமிழ் இலக்கியச் சுவையை மாணவர்க்கு உணர்த்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளன. இவ்வெளியீடு தமிழபிமானிகளுடைய ஆதரவுக்கு உரியது.

சு. நடேசபிள்ளை

இராமநாதன் கல்லூரி,
8-9-56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

# அணிந்துரை

அருங்கலை விநோதரும் பிரசங்கசபாமணியு மாகிய உடுவில் தமிழ்ப்புலவர் உயர்திரு. வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள் எழுதிய 'செந்தமிழ்ப் பூம்பொழில்' என்னும் சிறந்த கட்டுரைத் தொகுப்பு நூல், "புகழேந்திப்புலவர்" முதல் "சகோதர வாஞ் சையின் தனிச்சிறப்பு" ஈருகப் பன்னிரு கட்டுரை களைக் கொண்டு மிளிர்கின்றது. அதனைப் படிப்ப வர்கள் முற்காலத்திலே அரசர்களும், பிரபுக்களும், புலவர்களுக்குச் செய்த உபசாரங்களையும், கல்வி வளர்ச்சிக்கும் உள்ளக் கிளர்ச்சிக்கும் காரணமான சில சரித்திர பாகங்களையும், சொல்லும் பொரு ளும் சுவைபடப் பாடிய பலவகைப் பாக்களையும் அறிய வல்லவராவர். நூலாசிரியர் சங்கச் சான்ருேர் நூல்களிலும் பிறநூல்களிலும் பெரிதும் பயிற்சியு டையவரென்பது அக்கட்டுரைகளால் நன்கு அறியப் படும்.

ஐயரவர்கள் தமிழ் மாணவருக்கும், பிறருக்கும் பயன்படுமாறு இன்னேரன்ன நூல்களை இயற்றிச் செய்துவரும் கைம்மாறற்ற தொண்டைத் தமிழுல கம் உவந்து ஏற்றுக்கொள்ளும் என்று எண்ணு கின்றேன்.

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

புலவரகம்,
சுன்னுகம்,
துர்முகி ஆவணி 24உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை .... .... iii

அணிந்துரை v

1. புகழேந்தியார் புலமை .... 1

2. ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் கவித்துவம் 19

3. தமிழின் சிறப்பு .... 31

4. புலமையிற் சிறந்து விளங்கிய புராதன மன்னர்கள் 50

5. ஐம்பெரும் நிலங்களுள் அழகொளிர் மருதம் 57

6. நானிலத் தமிழகத்தின் குறிஞ்சிநிலக் காட்சி 65

7. ஐந்திணை வகுத்த செந்தமிழ் வாணர் 73

8. கதிரைமலைப் பள்ளு .... 82

9. அரசு கட்டிலில் துயின்ற புலவருக்கு விசிறிகொண்டு வீசிய வேந்தன் 87

10. இல்லற நெறிநின்று வீடுபேறு பெற்ற வன்தொண்டர் 92

11. தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை 100

12. சகோதர வாஞ்சையின் தனிச்சிறப்பு 106



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியரின்

## வெளியீடுகள்

---

1. பிரசங்கரத்தினதீபம்
2. திருவள்ளுவர் பெருமை
3. வசனரத்தினுமிர்தம்
4. விவேகரத்தினம்
5. குமாரசுவாமிப்புலவர் சரிதம்
6. கிள்ளைவிடுதூது பரிசோதித்தது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழேந்தியார் புலமை

——:o:——

பிறப்பு:—சான்ருேருடைய தண்டமிழ் நாட்டில் தொன்மை வாய்ந்த தொண்டை நாட்டுள் செங் கற்பட்டிற்குச் சமீபமாகவுள்ள பொன் விளைந்த களத்தூரில் துளுவ வேளாளர் குலத்தில் புகழேந் தியார் அவதரித்தார். சமயம் வைணவம் என்ப.

காலம்:—கி. பி. பதிஞேராம் நூற்ருண்டின் பிற் பகுதியில் கம்பர் ஒட்டக்கூத்தர் வாழ்வைக் கூறலாம் என்றும், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் சம காலத்தவரென்றும் நாம் தெளிந்து கொள்ளத்தகும். எனவே, புகழேந்தியார் காலம் ஏறக்குறைய ஆயி ரத்து ஐம்பது என்பது துணிபாம்.

வாழ்க்கை:—புகழேந்தியார் மிக்க மதியுடையவர். இவர் இளமைப் பருவத்திலே இலக்கண இலக்கி யக் கடலைப் பருகிக் கவிதா மேகமாக விளங்கினுர் என்பது வெளிப்படை. ஆயினும் சில காட்டுதும். புகழேந்தியார், தொண்டைநாடு நீத்துச் செந்தமிழ் செழித்த மங்கலப் பாண்டிநாட்டுக்கு வந்து ஆண் டுள்ள இரண்டாவது வரகுணபாண்டியனுல் அரிய பரிசில் பல நல்கப்பெற்று நன்று காலம் போக்கி னுர். அக்காலம், ஒரு நாள் முதற் குலோத்துங்க சோழனுக்குப் பாண்டியன் மகளை மணமுடிக்க வேண்டி, அம்மன்னன் ஆசிரியராகிய ஒட்டக்கூத் தர் பாண்டியன் அவைக்களங் குறுகினுர். அன்புரை பலப்பல கூறியபின், பாண்டியன், ஒட்டக்கூத்தரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளித்துப் "பைந்தமிழ்ப் புலவீர்! நமது பெண்ணை மணமுடிக்கத்தக்க ஏற்றம் சோழனிட முண்டா?" என்று வினவினன். கூத்தர், பின்வரும் பாவால் விடையிறுத்தார்.:—

கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானே
யாருக்கு வேம்பு நிகராகுமோ வம்மானே
யாதித்தனுக்கு நிகரம் புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானே
யூருக் குறந்தைநிகர் கொற்கையோ வம்மானே
யொக்குமோ சோணாட்டுக்குப் பாண்டிநா டம்மானே.

இன்னணம் வினவிச் சோழனுக்குப் பாண்டியன் சமமுடையனல்லன் என்னக் காட்டி ஒட்டக் கூத்தர் கூறியதும், பாண்டியன் பக்கமிருந்த புகழேந்தியார், அப்பாவை மறுத்துப் பாண்டியனார் பராக்கிரமத்தைப் புகழ்ந்தார்.

ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளிந்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானே
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே
கரையெதிரன் காவிரியோ வையையோ வம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானே
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே.

என்னும் உயர்பொருள் பொதுளி மறுக்கொணுப் பெருமை சிவணிய அரிய பாடல் புகழேந்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியதும் அவர்மீது ஒட்டக்கூத்தருக்குப் பொருமை யுண்டாயிற்று. ஒட்டக்கூத்தரும் பாண்டியனிடம் சோழன் பெருமை பலகூறி, வழுதியர்கோன் மகளைச் சோழனுக்கு மணமுடிக்க நிச்சயித்துத் திரும்பினர். சோழனும் மகிழ்ந்து கூத்தரைத் தனக்குப் பிரதிநிதியாகச் சிலகாலம் அரசாள வைத்துச் சேனையுடன் இஷ்டஜன பந்துக்கள் சூழ்வரக் கூடல்மாநகரை யடைந்தான். ஆலவாயமரவிர் சடையண்ணலைச் சீலமாய்ப் போற்றிப் பாண்டியன் மகளை வதுவையாற்றி அவன் பலவித வரிசைகளும் நல்கிப் பாவலரேரும் புகழேந்தியாருடன் விடுப்பத் தன் மானகரடைந்தான். பாண்டியன் தனது புத்திரிக்கு நன்மதி தெருட்டும் அமைச்சராகப் புகழேந்திப் புலவரை யனுப்பினன். சிலர், புகழேந்தியார் வைணவராகலின், அனுப்பினன் என்பர். புகழேந்தியார் ஒட்டக்கூத்தரால் துன்புறுத்தப் பெற்ருலும், பின்பு நற்கீர்த்தி மேவி நல்வாழ்வடைந்தார்.

புகழேந்தியார் சோணுடு வந்தடைந்ததைக் கண்ட ஒட்டக்கூத்தர் பழம்பகை பாராட்ட ஏற்ற சமயமிதுதான் என்று கருதிச் சோழனிடம் "இவன் முன் நுமக்குப் பாண்டியனைப் பெண் கொடுக்க வொட்டாது நுங்குலத்தைப் பழித்தவன்" என்னச் சோழனும் புகழேந்தியாரைச் சிறையிலிடும்படி செய்தான். புகழேந்தியார் இது கர்மபலமே என்று கருதிச் சிறைக்கூடத்து வைகினர். புலவர் வாய் சும்மா இராது. அல்லியரசி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை முதலியவற்றைப் பாடி அவ்வழியே நீர் மொள்ளச் செல்லும் நங்கையர்க்கீந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் களிப்புடனளிக்கும் நல்லரிசி பருப்பு முத லிய பொருள்களைச் சாளர வழித்தாய்ப் பெற்றுப் பாகஞ் செய்து உண்டு இன்புடன் போது போக்கி வந்தார். ஒருநாள் சோழநம்பி, பட்டத்து யானை மீது வரும்போது, காவற்கூட மேன்மாடியி லுலா விய புகழேந்தியாரை ஒட்டக்கூத்தருக்குக் காட்டி "இவர் செந்தமிழ்ப் புலவரல்லவோ?" என்று வின வினன். அதற்குக் கூத்தர் புகழேந்தியார் தம்மினு மிழிந்தாரென்னும் பொருள்படப் புனைவிலி புகழ்ச்சி யணியாக ஒரு பாக் கூறினர். அது வருமாறு:—

மானிற்குமோ வந்த வாளரி வேங்கைமுன் வற்றிச் செத்த
கானிற்குமோ வவ்வெரி யுந்தழன்முன் கனைகடலின்
மீனிற்குமோ வந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்குமோ வக்கதிரோ னுதயத்திற் றார்மன்னனே.

இது செவிப்புக்க மாத்திரத்திற் புகழேந்தியார், "இப்பாடலை ஒட்டிப் பாடவா? வெட்டிப் பாடவா?" என்று கேட்டார். சோழன் ஒட்டிப்பாடப் பணித் தலும் அப்படியே ஆசு கவிஞர் திலகமாகிய புகழேந் தியார் பின்வருமாறு பாடினர்:—

மானவ னுனந்த வாளரி வேங்கையும் வற்றிச் செத்த
கானவ னுனவ் வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவ னுனந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ னுனக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே.

இவ்வரும் பாடல் இனிமை யுடைத்தாதல் நோக்கிப் புகழேந்தியார்மீது மிகக மகிழ்வை அப்போது சோழனடைந்தாலும், ஒட்டக்கூத்தரின் பாலுள்ள அபிமானத்தால் யாதும் பேசாது சென்று விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலமும், இப்படியே நியாய அநியாய முணரா தோர் பலருளர். 'அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பது' சாலாதென்பதை அறிவுடையார் சிந்திப்பார். கல்வியறிவு நல்லொழுக் காறு இல்லாதோர் எதற்கும் தலைமை வகிக்க அரு ராகார். நிற்க;

நம் சோழராசனிடம் பற்பலவித பாக்களைப் பாடிப் பாவலர் பலர் பரிசில் பெற்று வந்தனர். ஒட் டக்கூத்தர் தனது அதிகாரம் ஆங்கே செல்லுதல் கண்டு அகந்தை கொண்டு அரிய பாவலர்களைச் சிறைக்கூடத்தில் வதிதரச் செய்து நவராத்திரி காலத்தில் அச்சமஸ்தானத்தில் நல்கப் பெறும் பரி சில் காலத்து, அப்புலவர்களை அழைப்பித்துச் சில வினக்களைக் குறும்பாக வினவி விடையிறுக்கும் ஆற்றலின்றி விழிப்பாரை, வன்கண்மையாகக் குடு மியுடன் குடுமி சேர்த்துத் தேவி முன் நிறுத்திப் பலியாக வெட்டவுஞ் செய்தனர். இக்காலம் தான் தோன்றிப் பேர்வழிகள் அரிச்சுவடியே தெரியாது ஆசிரியர், பண்டிதர், பாவலர், கவிராயர் என்று பல வித பட்டஞ் சூட்டிப் புறப்பட்டு கல்லா அறிவிற் புல்லறிவாளரை ஏமாற்றுமாறு போல வரும் ஒரு சிலரைக் கூத்தரும் தமது கூத்தால் கெடுத்து வந் தாரென்று தெரிகின்றது. இக்காலம் கலாபூஷணர் கள் மிகச் சிலராயிருப்பதும் பலர் வேடதாரிகளா யிருப்பதும், "தடுத்துப் பேச ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பதுபோலத் தானே! பின்வரும் ஒரு பாவைப் பார்க்க:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னிங்கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவ ரெனத் திரியலாமே "

என்று பிற்காலம் ஒருவரியம்பினர்.

இவ்வாறே, புகழேந்தியார் வைகிய காவற்கூடத்திலே பரிசில் வேட்டு ஆண்டுப் போந்தார் பலரைக் கூத்தர் செறித்தார். இவ்வுண்மை யுணர்ந்த இரக்க மனமுடைய புகழ்க் கடலாகிய புகழேந்தியார் தமது கலைக்கடலி னெவ்வோர் துளியால், அங்குற்றவர்களைக் குளிர்வித்திருந்தார். கூத்தருக்கு விடையிறுக்கும்படி குயவன் முதலிய சிலரைப் புகழேந்தியார் அனுப்பினர். முதற்கண், குயவன் கூத்தர் முன் குறுகிக் கும்பிடுபோடாது இறுமாப்புடன் நின்றான். கூத்தரும் அவனை நோக்கி,

" மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி
யானைமுன்வந் தெதிர்த்தவ னரடா ?"

என்றார். குயவன்,

" கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் பண்ணு மங்குசப் பயல்யான் "

என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையை அடக்குவது அங்குசம் என்ற அருங் கருத்து நோக்கிக் கூத்தர் வெட்கி அவனை ஓர் பால் நிறுத்தி விட்டார். பின் கண் பொட்டையான அம்பட்டனைப் பார்த்துக் கூத்தர்,

விண்பட்ட கொக்கு வல்லூறு
கண்டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின்றாய்
பொட்டையாய் புகலாய்

என்னச் சிறிதும் சலிப்பின்றி, அம்பட்டன்,

கண்பொட்டை யாயினு மம்பட்டனுன்
கவிவாணர் முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந்
திடுக்கிடப் பாடுவனே.

என்றான். கூத்தரின் ஆடம்பரம் அவனிடம் பலியாமையால் வெகுளி தோன்றினும், அதனை மறைத்துக் கொல்லனை நோக்கி வசனமாக, "நீ யார்? உன் வரலாறு யாது, என்ன" என்று ஒட்டக்கூத்தர் கேட்டார்.

அதற்குக் கொல்லன்,

செல்வன் புதல்வன் றிருவேங்கடவன்
செகற் குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு
வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டமாட்டிப்
பகைவர் முன்னே
யல்லும் பகலு மடிப்பேன்
கவியிருப் பாணிகொண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். இக்கவிஞனையும் அப்பால் நிறுத்திவிட்டு, அடுத்த வேளாளனைக் கூத்தர் வினவுகின்றார்.

"மகா வித்துவானாகிய நமக்கு முன்னே அற்பனாகிய நீயும் புலவன் என்று வந்து நிற்கலாமா" என்று கூத்தர் கேட்டார்.

வேளாளன்,

கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநதப்
பூக்கண்டு கொட்டியும் பூவாதொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்த! நின்கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்களோ தமிழ்பாடிய பாவலரே.

என்று விடையிறுத்தான். இதுவன்றி, ஒட்டக்கூத்தர் பாடிய "அண்டத்துப் பரணி" என்ற நூலிலும் குற்றங் கற்பித்து வேளாளன் நிற்றலைக் கூத்தர் கண்டு வெட்கமுற்றார். மற்றைய தச்சன், தட்டான் என்ற இருவரும் பாட்டால் கூத்தர் மேட்டிமையை அடக்கினர். அப்போது கூத்தர் இவையெல்லாம் புகழேந்தியார் வேலைத் திறமென்றே கருதினார். அதனால், புகழேந்தியார் நீங்கலாக மற்றையோரைச் சிறை நீக்கினார். அவர்களும் சோழ மன்னனிடம் தக்க பரிசில் பெற்றுப் புகழேந்தியாரையும் வாயார வாழ்த்திச் சென்றனர்.

இங்ஙனம் ஒட்டக்கூத்தர் செய்த இடர்களைப் புகழேந்தியார் பொறுத்திருப்பதைச் சில பெண்களால் சோழன் மனைவியாகிய பாண்டியன் மகளார் அறிந்து கவன்றார். அரசன்மீது அவருக்கு வெறுப்பு இருந்தது. தன் நாயகன் அந்தப்புரம் வரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருந்து அவர் தாளிட்டனர். அப்போது நாயகனுகிய சோழன் மனைவியாரைக் கதவைத் திறக்க வேண்டியும், அவர் திறவாமையால் தமது புலவராகிய ஒட்டக்கூத்தரை அனுப்பினுன். ஒட்டக்கூத்தர் பாட்டு,

நானே யினியுன்னை வேண்டுவ தென்கொ ளனினமலர்த்
தேனே கவாடந் திறந்திடு வாய் திறவாவிடிலோ
வானே றனைய விரவி குலாதிபன் வாயில் வந்தால்
தானே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே.

இப்பாடல் கேட்டவுடனே இராஜகுமாரி பாடலின் கடுமைகண்டு இரட்டைத் தாழ்ப்பாளிட்டனள். அதுகாலை தொடங்கி "ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்ற பழமொழி வழங்குவதாயிற்று. "புகழேந்தியாரைச் சிறை யகத்திட்டதே நம் தேவி ஊடலுக்குக் காரணமாகும்" என்று சோழன், புகழேந்தியாரைச் சிறைநீக்கி அரசியின் பிணக்கை ஒழிக்குமாறு வேண்டினன். புகழேந்தியார் பள்ளியறைப் பாங்கரில் நின்று பின்வரும் இனிய பாடலைப் பாடினர்:—

இழை யொன்றிரண்டு வகிர்செய்த
நுண்ணிடை யேந்தியபொற்
குழை யொன்றிரண்டு விழியணங்கே
கொண்ட கோபந்தணி
மழை யொன்றிரண்டு கைம்
மானுபரணனின் வாயில்வந்தால்
பிழை யொன்றிரண்டு பொருரோ
குடியிற் பிறந்தவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரும் பாடல் செவிபுக்க மாத்திரத்தில் இராசபத்தினி மகிழ்ந்து கதவு திறந்தனள். அன்று முதல் புகழேந்தியாருக்கும் நற்கால முதயமாயிற்று. ஆனாலும், மன்னன் ஒட்டக்கூத்தர் பேச்சையே கேட்டு வந்தான். புகழேந்தியார் அந்நகர் நீங்கி முரணூரை யடைந்து சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசன் போஷணையில் வதிந்தார். இப்படியே சில காலம் கழிந்தது. அக்காலம், வடமொழியில் வல்லவர்கள் நள சரித்திரத்தைப் பிரசங்கஞ் செய்யக் கேட்ட சந்திரன் சுவர்க்கி தமது ஆஸ்தானப் புலவராகிய புகழேந்தியாரை நோக்கி, "நீவிர் நள சரித்திரத்தைத் தமிழ்ப் பாவினுலே காப்பியமாகப் பாடித் தரல் வேண்டும்" என்ருன். அதுகேட்ட கவிஞர் திலகராகிய புகழேந்தியார் வெண்பாப் புலியாதலின் வெண்பாவினுலே யாத்து யாவருங் களிப்படையும்படி, அவனது அவைக் களத்தில் அரங்கேற்றினுர். "வெண்பாவிற் புகழேந்தி" என்று இன்றும் புகழேந்திப் புலவர் புகழப் பெறுதலறிக.

இன்னவாறே புகழேந்தியார் நன்மதிப்புடன் "கற்ருேர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு" என்ற முதுமொழிக் கிலக்கியமாக ஆங்கே வதிந்தார். சில ஆங்கிலப் படிப்புடன் எல்லாந் தெரிந்ததாக நடிக்கும் போலி வேடதாரிகள் இக்காலம், "கற்ருேர்க்குச் சென்ற விடமெல்லாஞ் செருப்பு" என்று புதுமொழி புனைவது செந்தமிழ்ச் செல்வர்க்கு நகைப்பைத் தருவதாகும். நிற்க, குலோத்துங்க சோழமன்னன் புகழேந்தியாரைப் பின்பு பல மரியாதையுடன் வரவழைத்து நளவெண்பாவைப் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கஞ் செய்து நல்லறிஞர் செவிக்குப் புதுவிருந் தளிப்பான் வேண்டினன். புகழேந்தியாரும் அதற் கியைந்து நளவெண்பாவைப் பிரசங்கித்து வந்தார். அவைக்கண் வீற்றிருந்த ஒட்டக்கூத்தர் பின்வரும் பாடலுக்குத் தடை கூறினர்.

“மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப — முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது”

என்ற இச்செய்யுளில் மல்லிகை யரும்பினைச் சங் காகவும், வண்டினைச் சங்கூதுவோனாகவுங் கூறிய தில், “சங்கு வாத்தியத்திற்கு அதனடியே வாய் வைத்தூதும் பாகமாக, மேற்பாகத்து ஊதும் வண் டினை அன்னவாறே உருவகப்படுத்தியது இயற்கை விரோதமாகும்” என்றார்.

“கட்குடியனுக்கு வாயும் மற்றொன்றும் பேத மாகத் தெரியாது” என்று புகழேந்திப் புலவர் விடை யைச் சாதுரியமாகக் கூறிச் சொன்மாரி பொழிந்து புலவராம் பைங்கூழைக் குளிர்வித்தார். இம்பர் போற்றுங் கம்பர் முதலிய கவிஞர்களும் புகழேந்தி யாரைப் புகழ்ந்தனர்.

பின்னொரு நாள் புகழேந்தியார் ஒட்டக்கூத்த ரைக் கொல்ல எண்ணினரென்றும், புகழேந்தியார் கவிச்சுவை மாந்தி அவிச்சுவை வேண்டாது ஒட் டக்கூத்தர் இல்லத்துரையாடியது கேட்டு அவரை மன்னிக்க வேண்டினரென்றும், இச்செய்தி யறிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழன் மிக மகிழ்ந்தானென்றுங் கூறுவர். இரு புலவருடன் சோழன் திருநெய்த்தானத்துச் சிவ பிரானைச் சேவித்து வரச்சென்று, "நெய்த்தானத் தானைச் சேவித்தே" என்பதை இறுதியாகவுள்ள இந்த விருத்தம் பாடக் கேட்டான். கூத்தர் யாத்த பாட்டு :—

விக்கா வுக்காவித்தா விப்போய் விட்டார்
நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தாசைப்பா டுற்றிற்றே
டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பாடப்பூ
ணெக்கா டக்கா னத்தாடப்போ
நெய்த்தானத் தானைச் சேவித்தே.

புகழேந்தியார் பாட்டு :—

தற்கோவிப்பூ சற்பா சத்தே தட்டாமற்சா
கைக்கே நிற்பீர்
முற்கோ லிப்பூ சித்தே முட்டா
மற்சே வித்தே நிற்பீர்
வற்ரு நெட்டோ டைப்பாரைச்
சேன்மைப் பூகத் தேறித்தாவிப்போய்
நெற்ரு ளுற்ரு லைப்பாகிற் சேர்
நெய்த்தானத் தானைச் சேவித்தே.

இக்கவிகளில் புகழேந்தியார் கவி மேலான தென்று தொண்டைமண்டலச் சதகங் கூறும். பின் னும் பல ஸ்தலங்களில் தனிச் செய்யுட்களை இரு வரும் பாடி மன்னனை மகிழ்வித்தனர். ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனைக் கண்டு தான் நீட்டியிருந்த இரு கால்களில் ஒன்றையும், புகழேந்தியாரைக் கண்டு மற்றொரு காலையும் மடக்கி, ஒட்டக்கூத்தரைப் பார்த்து இரு தாளையும் நீட்டினர் என்றும் கூறுவர் இன்னும் சில கவிகளும். சரிதமும் விரிப்பிற் பல்கும். ஆதலின், நூல் நயங்காட்டி வியாசத்தை முடிப்பாம்.

நூல்வகை:—நளவெண்பா, அல்லி அரசிமாலை, பவளக்கொடிமாலை, புலந்திரன் களவுமாலை, இரத்தினச் சுருக்கம் என்பனவும், தனிச் சந்தச் செய்யுட்களுமாம். "காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தின், நேராது நையும் படியென்ற பாடலின் நேரியர்கோன், சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன்" என்றதனுற் கலம்பகமும் பாடினர் என்று தெரிகிறது.

நளவெண்பா என்பது நிடதநாட்டதிபதியாகிய நளமகாராஜனுடைய சரித்திரங் கூறும் ஒரு காப்பியம். நளமகாராஜனே அரிச்சந்திரன், கார்த்தவீரியார்ச்சுனன். புருகுற்சன், புரூரவன், முசுகுந்தன் என்னும் சக்கரவர்த்திகளோடு வைத்தெண்ணப்பட்டவன். நளனுடைய சரித்திரத்தை வெண்பாவினுற் கூறும் அடையடுத்த கருவியாகு பெயர்க் காரணப் பெயராய் "நளவெண்பா" என்று நிலவப் புகழேந்தியார் புலமை புலப்பட யாத்தனர் எனக் கொள்க. இந்நள சரித்திரத்தில் புறநானூறு, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் வரும் செம்பொருள்களும், திருவாய்மொழிப் பாசுரக் கருத்தும் வரும். இவர் அரிய புலமையும் "வெண்பாப் புலி" என்னத் தக்க பாநலனும் மிக்க அறிஞர் என்பது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
120857

தேற்றமாகும். அதிவீரராம பாண்டியர் இயற்றிய நைடதம் நளவெண்பாவுக்குப் பின்னர்த் தோன்றியதேயாம்.

இந்நளமகாராஜன் சரிதம் வடமொழி மாபாரதத்து இருபத்தெட்டு அத்தியாயங்களில் கூறப்பட்டது என்பர். "நளோபாக்கியானம்" என்று அப்பகுதிக்குப் பெயர். அதுவே நளவெண்பாவிற்கு முதனூலாகும். இது பெருங்காப்பிய இலக்கணமாகிய பல்வித அணிகளையும் ஆங்காங்கே கொண்டு திகழ்கின்றது. இரு செய்யுட்களைத் தாலீபுலாக நியாயமாகக் காட்டுவாம்.

வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப் — பையவே
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ? — இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

## II

## நளவெண்பாவினமைப்பு

நளவெண்பா, தெய்வவணக்க மங்கலத்தை முதலினுடைத்தாய், அறம் பொருளின்ப வளங்கெழுமி, தன்னிகரில் தலைவனாகிய நளனைப் பாட்டுடைத் தலைவனாகப் பெற்று நாடு, நகர், கடல், சூரிய சந்திரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய அத்தமன வருணனைகள் பொதுளி, தமயந்தி சுயம்வரமாகிய நன்மணம் புணர்த்தலும், நளன், நாடு இழந்து பின்னர்ப் பொன்முடி புனைதலாகிய பட்டாபிடேகவிழா நிகழ்ச்சியுமுடையதாய், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டுக்களை விளக்கி, மகப் பெறுதல், கலவியிற் களித்தல் புலவியிற் புலத்தல் களையும் ஏற்ற பெற்றியுரைத்து, தமயந்திபால் நளன் தூது சென்றதால், தூதும் அமைந்து, சிங்காரம், சோகம், நகை, வீரமாதிய சுவைகளைத் தன்னகத் துட்கொண்டு, வெண்பாவாம் முதற்பாவின் ஒரு திறத்தமைந்து மிளிர்கின்றமையால் பெருங்காப்பிய மென்னல் சாலும். நீலகேசி, சூளாமணி, நைடதம் முதலியன பெருங்காப்பிய இலக்கண மமைந்தாலும் சிறு காப்பியமென்பர் ஆன்றோர். அஃதேபோல நளவெண்பாவையுஞ் சிறுகாப்பியமென்பது பொருத் தமாகும்.

## நன்றி பாராட்டல்

இந்நளவெண்பாவில், கம்பர், ஸ்ரீ வில்லிபுத்தூ ராழ்வார் முதலிய கவிஞர்கள் முறையே திருவெண் ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியாரையும், வக்கை பாகத்து வரபதியாட்கொண்டானையும் அன்னமுஞ் சொன்னமுமளித்துக் காத்த நன்றியறிதலை நன்கு காட்டிச் சென்றாங்குப் புகழேந்தியார் நளவெண்பா வில் சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசனை ஐந்து இடங்களில், அதாவது சுயம்வர காண்டம் 17, 57-ம் செய்யுட்களினும், கலிதொடர் காண்டத்து 109, 128ம் பாட்டுக்களினும், கலிநீங்கு காண்டம் 48-ம் பாடலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
120857

னும் புகழ்ந்துள்ளார். இதனால், இவரேயன்றிச் செந்தமிழ்வாணர் செய்ந்நன்றி மறவாதவர் என்பதும் போதரும்.

அபிமானம் :—புகழேந்தியார் தமயந்தி சுயம்வரம் வேட்டுப்போந்த அரசர்களைக் காட்டிக் கூறுமிடத்து மூவேந்தரையும் முதற்கணெடுத்துக் காட்டுதலால், தேசாபிமானமும், கலிதொடர் காண்டத்தில் 133-ம் செய்யுளில் "வண்டமிழ் வாணர்ப்பிழைத்த வான்குடி போற் றீத்தழன்மீ, மண்டு கொடுஞ்சுரத்து" என்று பைந்தமிழ்ப் புலவர்களது ஆற்றல் தெரித்துச் சேறலால், பாஷாபிமானமு முடையரென்பது வெள்ளிடை மலையாம்.

ஞானக்கருப் பொருள் :— நளமகாராஜனை முத்திக்குரிய சீவனென்றும், அன்னப்பறவை கடவுளது கைம்மாறற்ற கருணை எனவும், தமயந்தி தத்துவ ஞானமெனவும், புத்திரர் சமதம குணங்கள் என்றும், சூதாட்டம் விடய உபாதி என்றும், அமைச்சர் அறிவு என்றும், புட்கரன் அவிவேகம் என்றும், கலி இயமன் என்றும், தமயந்தி பிரிவு தத்துவஞான நீக்கமென்றும், கார்க்கோடகன் பழவினை என்றும், வேடன் குரோதம் என்றும், அந்தணன் சற்குரு என்றும், இராச்சியப்பேறு முத்திப்பேறு என்றும் உய்த்துணரலாம். தேர் பிரணவத்தைக் குறிக்கும். ஏனையவற்றையும் இன்னணம் உருவகிக்க இடம் உண்டு. சரிதம் எவ்வளவு பெரு நிலையினும் சூதாடலாகாது என்பதையும், ஊழ்வலியின்றிறத்தையும் விளக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநூலோப்புமை :—இனி, நளவெண்பாவில், பிற நூனயம் சிற்சில இடங்களில், அமைந்திருக்கின் றன. திருவாய்மொழியில், திருமங்கையாழ்வார் பாடிய "செங்கால் மடப்புறவம் பேடைக்குப் பேசுஞ், சிறுகுரலுக் குருகிச் சிந்தித்தாங்கே" என்னும் அடி கள் நளவெண்பாவில் சுயம்வர காண்டம் 41-ம் செய் யுளில் "சேவல் குயிற்பேடைக்குப் பேசுஞ்சிறுகுரல் கேட்டாவி யுருகி யழிந்திட்டான்" என்ற அடிகளில் அமையுமாறு நோக்குக. **மணிமேகலையில்**, "கொடி மின் முகிலொடு நிலஞ்சேர்ந்தென்ன, இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு" என்ற வரிகள், கலிதொடர் காண்டத்து 114-ம் செய்யுளில், வான் முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல் தானுங் குழலுந் தனி வீழ்ந்தாள்" என்ற பாகத்தை நிகர்க்குமாறு காண்க. **கம்பராமாயணத்தில்** அயோத் தியா காண்டத்துக் கைகேயி சூழ்வினைப் படலத் தில் 47-ம் செய்யுளாகிய,

> எண்டருங்கடை கென்றயாம
> மியம்புகின்றன வேழையான்
> வண்டுதங்கிய தொங்கன்மார்பன்
> மயங்கிவிம்மிய வாறெல்லாங்
> கண்டுநெஞ்சு கலங்கியஞ்சிறை
> யானகாமர் துணைக்கரங்
> கொண்டுதம்வயி றெற்றியெற்றி
> விழிப்பபோன்றன கோழியே.

என்ற பாவின் அரும்பொருள் கலிதொடர் காண் டம் 115-ம் செய்யுளில்.



120857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தைய றுயர்க்கு தரியாது தன்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம் "

என்று அமைந்திருப்பதும் புகழேந்தியார் திட்பமான செந்தமிழ்ப் பெருநூல்களில் சிறந்த புலமையுடையரென்பதை நனி விளக்குமாறு அறியலாம்.

நளவெண்பாவின் நலம் :— படிக்காசுப் புலவர், "கேட்டாலு மின்பங் கிடைக்கும் கண்டீர் கொண்ட கீர்த்தியோடு, பாட்டாலுயர்ந்த புகழேந்தி சொன்ன படி" என வியந்தமையும்; கற்கக் கற்க நளவெண்பா இன்பம் பயந்து நிற்றலையும் கல்வியறிவுடையார் நன்கு தெளியலாம்.

இன்னும் புகழேந்தியார் பாக்கள் இழுமெனு மருவியினியன்று செல்லுமாறும், கற்பனைச் செழிப்புஞ் சொற் பொருணயங்களும் துவன்றி, எதுகை, மோனை யெழிற்பெருஞ் சிறப்புடைத்தாய்ப் பலவணி துதைந்து படிக்கவினிக்கும் பண்புமுடையன. இரத்தினச் சுருக்கம் மகளிர் கூந்தன் முதலியவற்றிற்கு உவமை காட்டிச் செல்லும் ஒரு நூல். இப்படியரிய நன்னூல்களை யாத்து உதவிய புகழேந்தியாரை நாம் நினைவுகூர்ந்து, நூல்களைப் படித்துச் செந்தமிழை வளர்ப்பதே முக்கிய கடமையாகும்.

## தனி வாழ்த்து

வாழ்க மலைநாடு வாழ்க வளச் சோணாடு
வாழ்க வழுதி வளநாடே—வாழ்கவே
முன்னீர்மை யோடு முதனீர்மை காத்தோம்பும்
நன்னீர் வயற் றொண்டை நாடு.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# ஸ்ரீலஸ்ரீ ஆதி
# குமரகுருபர சுவாமிகள் கவித்துவம்

—:o:—

செந்தமிழ் நாட்டிலவதாரஞ் செய்து செவ்வேள் திருவருள் பெற்ற குமரகுருபர சுவாமிகள் பாடிய சில கவிப்பெருமை கூறுதலும் தமிழ்ப்பெருமைக்கு இப்பெரியார் அருளிய செய்யுட்கள் இன்பமும் அணிநலமும் காட்டி மிளிர்வதைக் கவனிப்பதும் ஆவசியகமாகும். ஆன்மகோடிகளின் அழுக்கைப் போக்கி ஆனந்த வடிவாக்குங் கருணைவிலாசர் ஆதலின், முருகப்பெருமான் பரம்பொருளென்று கூறப் பெறுவார். அப்பெருமானின் உபதேசம் பெற்ற பெரியார் குமரகுருபரர் என்ற காரணநாமம் பெற்றூர். வேதாகமாதி சாஸ்திர உண்மை உணர்ந்த மனத்திண்மையுடைய வேளாளர் குலத்தில் முந்நூறு வருடங்களுக்கு முன்னே அவதரித்த பெரியவர் நமது குமரகுருபர அடிகள். ஸ்ரீவைகுண்டம் என்பது அவரது ஊர். பிதா சண்முகசிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார். திருச்செந்தூரில் சாந்நித்தியராக விளங்கும் சண்முகநாதக் கடவுளை வழிபாடு செய்தார்கள். அப்பரம் பொருள் திரம்பெறு கருணையா லவர்களுக்கு ஓராண் மகவு பிறந்தது. ஆலயவழிபாடுமுதலியன வேண்டாம் என்ற காலம் இப்போது தான் தோன்றியது. ஜோதிஷ நம்பிக்கையும் அக்காலம் மிகவுண்டு. இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் கிரகண முதலிய காட்சிப் பிரமாணங் கொண்டு ஜோதிஷவுண்மை தெளிவாக நிலை நாட்டப்படும். நிற்க;

அவதரித்த அக்குழந்தைக்கு ஜாதக கர்மம், சௌளம் முதலியனவுஞ் செய்து பாதுகாத்து வந்த பெற்றோர், அக்குழந்தை வாய் பேசாமையைக்கண்டு கவலை கொண்டனர். முருகப்பெருமானை வேண்டி நோன்புகள் பல அநுட்டித்தனர். திருச்செந்தூரை இருமுது குரவரும் சார்ந்து, பக்தர்க்கருளும் பகவானாகிய குமரநாயகனை ஊமை தீர்த்துப் புதல்வனைக் காத்தருளும்படி பிரார்த்தனை செய்திருந்தனர். அவர்களிடம் அன்பும் வைராக்கியமும் நிலையாயிருந்தன. வதனாரம்ப தீர்த்தம் படிந்து வானநாயகன் மலர்ப்பதம் பழிச்சி வரும் பெற்றோர் மகிழ, ஒருநாள் இராத்திரி பிராம்மீ முகூர்த்தத்தில் நம் குமாரக்கடவுள் அர்ச்சகர் வடிவுடன் எழுந்தருளி, குமரகுருபரா என்று தட்டி எழுப்பி, அவர் நாவில் ஆறெழுத்தை எழுதி, அச்சிறுவரைத் தமது விசுவரூப தரிசனத்திற்கு வரும்படி பணித்து மறைந்தருளினார். தேவ ஒளிவீசும் பூவுலகில் மகாதேவன் பெருமை யறியாதவர்களுக்குக் கடவுள் காட்சியளிப்பது யாங்ஙனம்? உடனே சிறுவர், தந்தை தாயரை அழைத்து நடந்தவற்றை நவின்றார். முருகவேளைப் பெற்றோரும வியந்து போற்றிச் சுவாமி சந்நிதியில் நின்றனர்.

அச்சமயத்தில் தேவசேனாபதியின் திருவருளால் செந்தமிழ்ப்புலமை உண்டாகத் திருச்செந்தூர்க் "கந்தர் கலிவெண்பா" என்னும் பிரபந்தம் பாடிக் குமரகுருபரர் சண்முகத் தெந்தையைப் போற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளருளானே காசினியில் யாவும் எய்தலாமென் பது வெள்ளிடை மலையாம். "செந்தமிழால்—வைதா ரையு மிங்கு வாழவைப்போன்" என்றார் பிறரும். குமரக்கடவுள் அகஸ்தியருக்குச் செந்தமிழ் உபதே சித்த வுண்மையையும் அம்மொழி மாண்பு காட்டுவ தாகும்.

குமரகுருபரர் சிவசின்னங்களாகிய விபூதி உருத் திராக்க மணிந்த பெரியார். கலிவெண்பாவில், பழ மறையென வேத வழிபாடு செய்தனர். அன்றி, சரியை, கிரியை, யோகம், ஞானங்களாகிய ஆகமப் பெரும்படிகளின் சார்பில் நிற்றலையும், "சத்தி நிபா தந் தருதற்கிருவினையும் ஒத்து வருங்கால முளவாகி" எனச் சுத்தாத்துவித சைவசித்தாந்த உயர்நிலையின் விசேட நிலையான இருவினை யொப்பு மல பரிபாகத் தன்மைகளையுஞ் சூசித்தனர். ஆன்மாக்கள் பிரளயா கலர், விஞ்ஞானகலர், சகலர் என்ற பேதமுடையர் என்பதையும் சிவபிரான் இன்ன திறனுடையார்க் கருளும் பெற்றியையும் ஆங்காங்கே குறிப்பிட்டமை அறிஞர்க்கு இன்பந் தருவதாம்.

குமரகுருபரர் ஞானுசாரியரையடைய விரும்பி வழிபாடு செய்யும்போது, உத்தரதேச யாத்திரை செய்யும்படியும், யார் முன்னிலையில் வாக்குத் தடைப் படுமோ அவரைக் குருவாகக் கொள்ளும்படியும், அசரீரி உண்டாகக் கேட்டு, ஆண்டவனருளைப் பூண்டு வணங்கி, ஆங்ககன்று ஸ்ரீவைகுண்ட நகரில் வந்து சிவகுக வழிபாட்டுடன் வதிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு குமரகுருபர அடிகள் மதுரையைத் தரிசிக்க ஆர்வங் கொண்டு, தம்பியாராகிய குமாரகவி என்பார் உடன் வரப் புறப்பட்டு, வரும் வழியில் 'மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தம் பாடி முடித்துக்கொண்டு திருப்பரங்கிரி நண்ணி, வென்றிவேலண்ணல் விரைமலர்ப்பாதம் பணிந்து அன்று அங்கே தங்கினார். அக்காலம் மதுரையில் அரசு வீற்றிருந்தவர் திருமலை நாயக்கர். அவரிடம் மீனாக்ஷி அம்மையார் சொப்பனத்திற் ேறான்றி, "நமது குமரனாகிய சுப்பிரமணியனுடைய கிருபை பெற்ற அன்பனொருவன் எம்மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடி முடித்து வந்திருக்கின்றான். நீ அவனை அழைத்து வந்து, நமது சந்நிதியில் அரங்கேற்றக் கடவாய்" என்று அருளிச் செய்து மறைந்தார். உடனே திருமலை நாயக்க மன்னர் விழித்து எழுந்து தாம்கண்ட கனவை யாவருக்கும் அறிவித்துப் பரிவாரங்களுடன் திருப்பரங்கிரியை நண்ணி விண்ணவர் நாதனை வணங்கி சுவாமிகளையும் பணிந்து போற்றினார். குமரகுருபர அடிகளைத் தரிசிக்கப் பெற்றது பூர்வ புண்ணிய விசிட்டமென்று புகழ்ந்தார். பின்பு, மீனாக்ஷியம்மையார் கட்டளையையுங் கூறிச் சுவாமிகளையும் பிள்ளைத்தமிழையும் யானைமேலேற்றி மதுரை மாநகர் வீதியுலாப் போந்து ஆலயமடைந்தார்கள். ஆங்கே சர்வலோக ஜநநியாகிய மீனாக்ஷியம்மையார் சுவாமிகளுக்குத் தமது இளந் திருக்கோலங் காட்டியருளினர். சந்நிதானத்தில் வீற்றிருந்து குமரகுருபரரும் பிள்ளைத்தமிழை அரங்கேற்றுவாரானார். தினந்தோறும் பாசுரங்களைப் படித்துச் செம்பொருள் கூறி வந்தகாலத்தில், மீனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிகையார் அருச்சகர் குழந்தை போன்று, அரசர் மடிமீது வைகிக் கேட்டமை அப்பிரபந்தப் பாமகிமை விளக்குவதாகும்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே
நறை பழுத்த துறைத் தீந்தமிழி னொழுகு
நறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும் பருளக்கோயிற் கேற்றும் விளக்கே
வளர் சிமைய விமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறி தரங்க
முடுக்கும் புவனங் கடந்து நின்ற வொருவன்றிரு
வுள்ளத் திலழ கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயி ரோவியமே மதுகரம் வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே
வருகவே மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

இவ்வமிழ்துகு பாவைப் பின்னுமொரு முறை படிக்கக் கூறிக் கேட்டு அம்மையார் மறைந்தருளினர். திருமலை நாயக்கரும் உலகமாதா திருவருளால் உருவு கொண்டு எழுந்தருளியமை கண்டு மகிழ்ந்தார். உண்மைப் பக்தியுடையார்க்கும் வேதாகம வழி நடப்பாருக்கும் திருவருள் எளிதாகக் கிட்டும் என்பதும், ஆலயங்களில் சிவமும் சத்தியும் சாந்நித்தியமாயிருந்து கிருபை பாலித்தார் என்பதும், நாம் நன்குணர இவர்போன்ற பெரியார் சரிதங்கள் துணையாகும். வடமொழி வேதங்கள் பிரமாணமன்று என்று சிலர் வெளிக்கிளம்பு மிக்காலம் அம்மாண் மொழியில் உள்ள கருத்தையே குமரகுருபரரும், ஏனைச் சமயகுரவர்களும் தமிழிற் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள் என்பது புதுமையாகத் தோன்றும். பர மொழிப் பயிற்சிதான் விபரீத வுணர்விற்கு வித்தா கும்.

இன்னும், மீனாக்ஷியம்மையார் குமரகுருபர வடிகள் பாடிய வருகைப் பருவத்திற்கு உவந்தருளி யதுபோல முத்தப் பருவத்தைக் கூறும்போது முத்தமாலை நல்கி முழுதருள் பாலித்தார். அருஞ் செய்யுள் ஒன்று வருமாறு:—

காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப்
பழம் பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண்
மணியே யுயிராலை
வாலத்துணர்வென் வீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளி
பூத்தருள் பழுத்த
மலர்க் கற்பகமே யெழுதாச் சொன்மழலை
ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றாத்
துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங்
கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த முழு முதலே
முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடு மும்முலையாய்
முத்தந் தருகவே.

பழம் பாடல்-வேதம். எழுதாச்சொல் என்பதும் ஆரிய மறையைக் குறிப்பதாம். தோன்றாத் துணை-சிவபிரான். சிவபிரானுக்கு அபிந்ந சக்தியாகவுள் ளமை விளக்கியவாறு காண்க. "சிவமெனும் பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுஞ் சத்தியொடு சேரினைத் தொழிலும் வல்லதாம்" என்பது உண்மை நூற்போதம். இவ்வரிய பாடலின், உயர்ந்த சைவ சித்தாந்த நுண்பொருள் ஆராய்வார்க்கு அகவிருள் துரந்து மெய்ஞ்ஞான வொளி பரப்பத் துணையாதல் சிந்திக்க.

திருமலை நாயக்க மன்னர் கொடுத்த சீர்செறி வரிசைகள் பலவுடனவர் அநேக ஸ்தலங்களை வணங்கிக் கொண்டு சென்றூர். அக்காலை தருமபுர வாதீனத்தில் நான்காவது குருமூர்த்தமாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் தக்ஷிணாபிமுகமாக வீற்றிருந்தருளினர். சுத்தாத்துவித சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஓதி யுணர்ந்து அவற்றிற் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை அநுசந்தானமாகக் கொண்டு குருபக்தி மல்கிய அடியார் கூட்டங்களும், வேதசிவாகம விற்பன்னர்களும் சைவசீல ஆசாரியர்களும், இலக்கண இலக்கிய தருக்க நூற்றுறை போகிய நுண்ணறிவாளர்களும் புடைசூழ்ந்திருப்பத் தேசிகர் ஞானபானுவாக விளங்கியமை கண்டார். அவருக்கு உளங்குளிரும் இன்பத்திறமாகவே இருந்தது. விருதுக்களுடன் சென்ற குமரகுருபரவடிகள் திருமடஞ் சார்ந்து, சந்நிதியில் உத்தரீயத்துடன் ஆசனத் தமர்ந்திருந்தார். அப்போது, மாசிலாமணி தேசிகரால் வினவப்பட்ட பல வற்றிற்கும் நமது சுவாமிகளும் விடையிறுத்தார். பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட சரிதத்து வரும் அரிய பாட்டின் அனுபவப் பொருளை வினவியபோது குமரகுருபரர்க்கு வாக்குத் தடைபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செய்யுள்

ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்க ளான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடு மானந்த
வெல்லையின் றனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

இவ்வரிய பாட்டின் செம்பொருள் குறிப்புப் பொருள்கள் கலைவல்லுநரிலும், ஞானானுபூதிச் செல்வர்களே செவ்விது கூறுவர். நிற்க;

முருகக் கடவுளது திருவாக்கை யுணர்ந்து குமர குருபரனார் உடனே எழுந்து உத்தரீயத்தை இடையிற் கட்டிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, "எம்பெருமானே! ஏழையேன் ஆணவமல முகிழ்ப்பாற் புரிந்த பிழையைப் பொறுத்தருள்க" என்று வேண்டிக் கொண்டார். அச்சமயம், மாசிலாமணியாகிய குருமூர்த்திகள் குமரகுருபரரைக் காசி யாத்திரை முற்றி வருமாறு கட்டளை செய்தார். குமரகுருபரர் பக்தி விசிட்டத்தால், உடல் நிலையாமையை விளக்கவே, சிதம்பர ஸ்தலத்தையாவது தரிசித்து வர வேண்டும் என்று குருமூர்த்திகள் ஆக்ஞை செய்தார். சீடராகிய குமரகுருபரனார் அடக்கத்தையும் குருபக்தியை நமது நாட்டு வாலிபர்கள் நன்கு சிந்தித்து, அடக்க ஒழுக்க நன்னிலைகளைக் கைக்கொள்வது சாலப் பயன்றருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரவடிகள் திருப்புள்ளிருக்கும் வேளூர் சென்று வைத்தியநாத சுவாமியையும் தையல்நாயகி அம்பாளையும் வணங்கி, முத்துக்குமார சுவாமியைப் பணிந்து புறத்தே வரும்போது அம்முருகப் பெருமான் அருச்சகர் வடிவாய் ஆங்குப் போந்து திருநீறு நல்கி, "நம்மைக் குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். அவ்வாறு கூறியருளியவர் குமர நாயகனே எனக் குமரகுருபரருணர்ந்து பணிந்து எப்படிப் பாடுவது என்று ஆலோசிக்குங்கால், "பொன்பூத்த குடுமி" என்று ஓரசரீரி வாக்கெழுந்தது. சுவாமிகள் அதனையே முதலாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடி வந்தார். செங்கீரைப் பருவத்து "தேனூறு கிளவிக்கு" என்பது "வாயூறி நின்றவன்" என மாற்றமடைதலும் அதனையு மமைத்துப் பாடி முடித்துச் சந்நிதியி லரங்கேற்றினர். சீர்காழிப் பதி சேர்ந்து சிவபிரானைப் போற்றிச் சிதம்பரம் அடைந்தார். ஆனந்த நடராஜப் பெருமானை அனவரதமும் திரிகாலங்களிலும் பணிந்து போற்றி செய்து குமரகுருபரர் ஆங்கே தங்கியிருந்தார். "சிதம்பர மும்மணிக்கோவை" என்பதும், "சிதம்பரச் செய்யுட் கோவை" என்பதும், "சிவகாமியம்மை யிரட்டை மணிமாலை" என்பதும் குமரகுருபர சுவாமிகள் இயற்றினர்.

இங்ஙனமாகச் சிதம்பரத்தில் ஒரு மண்டலகாலம் வதிந்து தருமபுர மடைந்து குருமூர்த்திகள் மீது "பண்டார மும்மணிக்கோவை" என்ற பிரபந்தம் இயற்றி, மாசிலாமணித் தேசிகரது சந்நிதியில் அரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்றினர். அக்குருமூர்த்திக ளருளால் காஷாயம் சிவசின்னதாரணத்துடன் பெற்று ஞானேபதேசத் தால் கிருதார்த்தராகக் குமரகுருபரர் விளங்கினர். அவர் தமது குருவுக்குத் தக்ஷிணையாகத் தமக்குக் கிடைத்த பொருள்களை நல்க, அக்குருமூர்த்திகள் அவற்றை ஏற்காது காசியையடைந்து தருமஞ் செய் யப் பணித்தார்.

குருமூர்த்திகள் சமூகத்துக் கூறியதாக வழங் கும் ஒரு செய்யுள் :

பூதங்கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்தசொல்
வாதங்கடந்து மனேலய மாயிந்து மண்டலம்போய்
நாதங்கடந்து நடுவெளி தாண்டி நலஞ்சிறந்த
போதங்கடந் தின்பப் பூரணமாகிப் பொலிந்ததுவே.

குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ காசிக்குச் சென்று கங்கா ஸ்நானமும், கேதாரநாதர் பூஜை, விசாலாக்ஷி யம்பா சமேத விசுவநாதசுவாமி வழிபாடுகளையுஞ் செய்து "காசிக் கலம்பகம்" என்பதொரு நூல் செய் தார். அந்நகராண்ட டில்லிப் பாக்ஷாவைக் கண்டு பேச இந்துஸ்தான் புலமை வேண்டிச் "சகலகலா வல்லிமாலை" யருளிச்செய்தார். அவர் அரசனுடன் பேசியும், பல அற்புதங்களைச் செய்தும், உயிர்ச் சிங்கமீதி வர்ந்து அரசன் முன் புகுந்தும், சிவபெரு மானே முழுமுதற்கடவுள் என்று சாதித்தும், ஆங்கே அரசனிடமிருந்து நிலம் வாங்கித் திருமடம் அமைத் தார். அது இன்றும் நிலைபெற்று நிலவுகின்றது. "திருவாரூர் நான்மணிமாலை" என்ற பிரபந்தமு மிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததே. பின்பு தருமபுரத்திற்கு மூன்று முறை வந்து சற்குரு தரிசனம் செய்தார் குமரகுருபரர் என்ப.

இன்னும், மதுரை மன்னனுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, பசியோடிருக்க நேர்ந்தமைபற்றி

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது."

என்ற குறட்பாவைக் கூறினர்.

அரசர் இதுகேட்டுத் திருக்குறளின் சாரமான ஒரு நூல் இயற்ற வேண்டிக் கொண்டார். 'நீதி நெறி விளக்கம்' என்பது குமரகுருபர சுவாமிகள் அருளியதாகும்.

இருபா வருமாறு:

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு — பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை பிறங்காத்துச்
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவா — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்.

குமரகுருபர சுவாமிகள் ஞானசாரியரிடமிருந்து சொக்கலிங்க மூர்த்தியை மீனக்ஷியம்பாவுடன் பெற்றுப் பூசித்தவர். ஞானசாரியரைப் பிரியவுடன்படாமை கண்டு அக்குருமூர்த்திகள் அருளியது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிருந்தாலு மலையிருந்தாலும் கருதரிய
நாட்டிருந்தாலு நமக்கென்ன காணல்லதோர் கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ரகாசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந்தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே.

காசியில் சிவதருமப் பெரும்பணியாற்றிச் சிவா னுபூதிச் செல்வராகக் குமரகுருபரப் பெரியார், வீற்றிருந்து, வைகாசிக் கிருஷ்ண பக்கத் திருதியை யில் சிவபிரான் றிருவடி நீழல் சார்ந்தார்.

இவர் சரிதையால், தெய்வத் திருவருளே எல்லா நலமுமளிக்க வல்லது என்பதும், பரமாசாரி யரின் திருநோக்கால் மல வாதனை நீங்கிக் கடவு ளின் கழல் சாரலாம் என்பதும், தேசப்பணி, மொழித் தொண்டுகளும் மக்களாற் செயற் பாலனவே என் பதும் பிறவுந் தேற்றமாம். நன்மை கடைப்பிடிக்க.

சுபம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# தமிழின் சிறப்பு

பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் என்னும் மொழியும் வழங்கி வருகின்றது. உலகத்தில் பேசப் பட்டு வரும் மொழிகள் பலவாக உள்ளன. தமிழை உலகப் பெருமொழி என்று கூற நாணமடைவாரு முளர். தாயை மதியாத சேயர்களிருந்தால், அவர் களைப் பற்றிப் பேசுதற்கு என்ன இருக்கின்றது? தமிழை மதிக்கும் அன்பர்களுக்குத்தான் தமிழின் சிறப்பு நன்கு விளங்கும். தமிழ் மிக்க பழமையான ஒரு மொழி. தமிழ் என்பதற்கு இனிமையுடையது என்று பொருள்.

"தமிழ் தழீஇய சாயலவர்" என்பதற்கு நச்சி ஞர்க்கினியர் இனிமை பொருந்திய சாயலுடையவர் என்று கூறினர். "தமிழென்பது இனிமை பண்பு" என்பது நிகண்டு நூலார் கருத்து.

இத்தமிழ் மொழி இறைவராலும், குமரவேளா லும், அகஸ்தியராலும். முடியுடை மூவரசர்களாலும், புலவர் பெருமக்களாலும், பிற சான்றோர்களாலும் வளர்க்கப்பட்டது.

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம்
தொழுதேத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்
பாகரெனில்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே
கணித்தறிவார்.

பாணினிமுனிவர் காலமும் அகஸ்தியர் காலமும் ஒருவாறு ஒரே காலமென்று கொள்ளலாம். ஆனால், துணிந்து கூற யாரும் முன்வரவில்லை. பொதுவாக கி. மு. ஏழாம் நூற்றாண்டு வரையில் பாணினி இருந்தார் என்பர் ஆராய்ச்சியாளர் சிலர். புது மொழிப்பற்று மிக்க ஒரு சிலர் தமிழின் பெருமையுணராது இடர்ப்படுகின்றனர்.

தமிழ் ஆரியமொழியுடன் தோழமை பூண்டு சங்கப்புலவர்களின் நாவிலே திருவிளையாட்டயர்ந்த காலமும் உண்டு. தமிழ்நாடு முழுவதும் ஒரே முதல்வியாகத் தமிழரசி அரசு வீற்றிருந்தாள். தமிழுக்கு எல்லையாக உள்ள இடத்தை

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத்
திந்நான் கெல்லையி னிருந்தமிழ் பயின்ற"

என்று வரும்பகுதி விளக்கும். "வடக்கே வடுகு வரம்பாக" என்று சிறு காக்கைபாடினியார் கூறியதை நோக்கினால் தமிழ்மொழி பரந்து நின்றமை அறியலாம். வேதகாலம், சரிதகாலம் என்ற இரு பகுப்பை வகுத்த தத்தர் என்னும் பெரியார் கி. மு. 2400 முதல் கி. பி. 1400 வரையும் சரிதகாலமென்று கூறிப் போந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினும் மதிக்க வினினும் மரபினுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.

என்று கம்பர் விளக்குதலினல், தமிழின் தொன்மை யும், சிறப்பும் நன்கு விளங்கும்,

முத்தமிழ் வளஞ் சிறிது காட்டுதும்.

முத்தமிழ்:—இயல், இசை, நாடகம் என்பனவாம். இலக்கண இலக்கியங்கள் இயற்றமிழாகவும், இராக தாள அமைதிகள் இசைத்தமிழாகவும், அபிநயத் துடன் நடித்துக் காட்டல் நாடகத்தமிழாகவும் வகுக் கப்படும். இராகத்தை இடம், செய்யுள், குணம், காலம் என்பவற்றை அறிந்து பாடுதல் வேண்டும். ஐந்து திணைக்கு முரிய இராகங்கள் இடம்பற்றியன. வெண்பா இராகம் சங்கராபரணம் ஆசிரியப்பா இரா கம் தோடி ஆரபி முதலியன. கலிப்பா இராகம் பந்துவராளி. கட்டளைக் கலித்துறை இராகம் பைரவி. விருத்தப்பா இராகம் காம்போதி மத்திய மாவதி முதலியன. மங்கள இராகம் மங்களகௌசிகை செஞ்சுருட்டி முதலியன. தேவார இராகம் பூபாளம், நீலாம்புரி முதலியன. துக்க இராகம் நீலாம்புரி, முகாரி முதலியன. மகிழ்ச்சி இராகம் காம்போதி, தன்னியாசி முதலியன. மாலை இராகம் கல்யாணி, காபி, சங்கராபரணம் முதலியன. யாம இராகம் ஆகிரி. விடியற்கால இராகம் பூபாளம், தேசாக்ஷரி முதலியன. இராக, பாவ, தாள வகைகள் மிகவும் விரிந்து நடைபெறும். ச, ரி, க, ம, ப, த, நி எழுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாளம் என்று வகுக்கப்படும். சுரங்கள் சட்சமம், நிஷபம், காந்தாரம், மத்திமம் பஞ்சமம், தெய்வதம், நிஷாதம் என்று வகுக்கப்படும். சுவரங்கள் ஆரோகணம், அவரோகணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம், ஆவாதம், மூர்ச்சனை, திரியுச்சம், பிரத்தியாக்ஷதம், கற்பிதம் என்ற பத்துவித கமகங்களோடு சேர்த்துப் பாடப்பெறும். முப்பத்திரண்டு இராகங்கள் முக்கியமானவை. இவை புருஷ பெண் இராகம் என்று பல பேதங்களோடும், ஜன்னிய இராகங்களோடும் பலவாய் விரிந்தன. பரத நூல்வல்லார் வாய்க் கேட்டுணர்க.

நாடகம்:—நாடகத்தை அகநாடகம், புறநாடகம், என்னப் பகுக்கலாம். அகநாடகம் கந்தம், பிரபந்தம் என்பவை முதலான தாளத்துட் பொருந்தும் பகுதிகளாம். புறநாடகம் தேவபாணி முதல் அரங்கப்பா வரையுமுள்ள செந்துறை வேறுபாடுகள் யாவும் அடங்கும்.

இன்னும், நாடகத் தமிழில் பெருந் தேவபாணி, சிறு தேவபாணி என்று பிரிவு உளதாகும் இவை முறையே பலதேவரையும், வருணப் பூதரையும் மூவடி முக்கால், வெண்பாவால் துதித்தல். நால்வகைத் தேவபாணியும் மக்கள் நலம்பெற வாழ்த்தலின் அவற்றைப் பின்வரும் பாடலானறிக.

"அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிகர் இருநிதி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கிற் கூத்து நிரம்பிவினை முடிக"

என்பதாகிய அடிகளால் மதிவாணனுர் விளக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் தேவ முதல்வர்களுக்கும் இன்பந் தருவது. தேவர்களின் கூத்துகள் வருமாறு :—சிவபிரானின் ஆடல் பாண்டரங்கம், கொடுகொட்டி காபாலம் என்பன. திருமாலாடல் குடம் திருமகளாடல் பாவை. முருகனுடல், குடை, துடி, இவற்றின் விரிவை சிவப்பதிகாரம் பரத நூல் முதலியவற்றிற் காண்க.

பண்டைக்காலம் இவ்வியல்புடைய பொன்பெறு நூல்கள் நூற்றுக்கணக்காக இருந்தன. என்றுலும் அவற்றைப் கற்றுப் பயனடைந்தோர் பலராக இருக்கவில்லை. சில அரசர்கள் தங்கள் ஆட்சியுள் உள்ள ஒரு கூட்டத்தாரை இசைக்கலை நாடகக் கலைகளில் வல்லுநராக்கி யிருந்தார்கள் என்றுணரலாம், செங்கோட்டியாழ், மகரயாழ் முதலியனவும், ஏனைய தோற்கருவி, துளைக்கருவிகளும் வழங்கப்பட்டு வந்தன. சீவகன், கோவலன் என்போருடைய சரிதங்களில் இசை, நாடகவிருந்து பொருந்திய பாகங்கள் இருக்கின்றன. "சங்கீதத்தின் இங்கிதம்" என்ற ஒரு கட்டுரையில் யான் முன்பு வேறு பத்திரிகையில் விளக்கியிருக்கிறேன்.

தமிழ் பயிலுதலின் அவசியம் :—செந்தமிழ்க் கல்வியைத் தமிழ்நாட்டவர் தக்கவாறு கற்கவேண்டியது மிகவும் அவசியமே! கல்விக்குரிய சாதனங்கள் குறைவான அக்காலத்தில் ஏட்டுச் சுவடிகளில் கற்றுப் பெருமை நாட்டிய மேதாவிகள் விளங்கினர்கள். அவர்கள் கல்வியின் மட்டற்ற பெருமையை நிலை நாட்டினர்கள் என்றுல், அது பிழையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளுக்கும் ஒளிக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறதோ? அஃதே போலக் கல்விக்கும், கல்லாத நிலைக்கும் வித்தியாசம் உண்டு. கல்வி புத்தியை வளர்க்கும்; செல்வம் புத்தியை மழுங்கச் செய்யும். திருடர், அரசர் முதலியோர்களாலும், வெள்ளம், நெருப்பு முதலியவற்றாலும் கல்வியைக் கெடுக்க முடியாது; செல்வத்தைக் குறைப்பது மிக எளிதாகும். கல்வியைப் பிறருக்குக் கற்பிக்குந் தோறும் வளரச் செய்யலாம். செல்வத்தைக் கொடுக்கக் குறைபடுதல் வெளிப்படையே! கல்வியுடையாரின் புகழ் உலகுள்ள வரையும் விளங்கும். செல்வமுடையாரின் பெயர் சில காலத்துள் மறைந்து விடும். ஆனால், கல்வியோடு கலந்த செல்வர் நாமம் நிலைத்திருக்கும். கல்வியே பணிவையும், ஒழுக்கத்தையும், பொருளையும், அறவழிச் செலவையும், இன்பவாழ்க்கையையும் நல்கும்.

> "வித்யா ததாதி விநயம்
> விநயாத் தியாதி பாத்ரதாம்
> பாத்ரத் துவாத் தநமாப்நோதி
> தநாத் தர்மம் தத: சுகம்"

என்று வடமொழிச் சுலோகம் கூறுகின்றது.

அழகில்லாதவரை அழகுடையராக்க வல்லது கல்வியேயாம். வெளியில் உள்ள பேரணிகலன்களால் உண்டாகும் அழகினும் கல்வியானெய்தும் அழகு சிறந்தது என்பது பேரறிஞர்களின் துணிபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலன் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்." (குமரகுருபரர்)

இளமையிற் கற்றல்:—இத்தகைய கல்வியை இளமையில் முறையாகக் கற்றல்வேண்டும். அழுக்கற்ற தூய வெண்மையான வஸ்திரத்தில் பல வேறு வகையான சாயம் நன்றாகப் பிடிக்கும். அதுபோல இளமைப் பருவத்தில் அழுக்கற்ற உள்ளமாக இருப்பதால், கல்வி மிகவும் பதிந்து பலனளிக்கும். மாணவர்கள் விடாமுயற்சியுடன் கற்றல்வேண்டும். சந்தேகமும் விபரீதமும் இன்றி நன்னூல்களைக் கற்பதே மரபாகும். அரிச்சுவடியை எழுதிப் படியாது இக்கால முறைப்படி படங்கள் மூலம் கற்பதும் நன்று. நீதிநூல், நிகண்டு, அந்தாதி, பிள்ளைத் தமிழ், இலக்கணம் என்பவற்றை நன்றாக மனனஞ் செய்து கற்றால் அவை மனதை விட்டகலமாட்டா. சில மாணவர், ஒருநாள் ஊக்கமாகவும், மற்றொரு நாள் சோம்பலாகவும் கல்வி பயில முற்படுகின்றனர். இஃது இனிதன்று. சிறிது கல்வி கற்றவுடன் "நானே பெரியோன்" என்று கருதுவதுந் தவறாகும். ஆசிரியருடைய மனதிற்கு உவப்பான அன்பு பணிவுடைமைகள் மாணுக்கன், மாணுக்கியர்களிடம் முக்கியமாக இருத்தல் வேண்டும். மாணுக்கரை உத்தம மாணுக்கர், மத்திம மாணுக்கர், அதம மாணுக்கர் என்று வகுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடை மாணாக்கர்

இதிற் கூறியாங்குத் தலைமாணவராய் இருந்தாலும், அவர் காற்கூறு கற்றவராகவே கருதப்படுவர். "ஆசான் உரைத்தது அமைவரக்கொளினும் காற் கூறல்லது பற்றலனாகும்." என்ற பழைய விதி மாறுபடாது. ஒரு மாணவர் எவ்வளவு மொழிகளை வேண்டுமானாலும் கற்கலாம். தாய்மொழியை மட்டும் மறவாது திறம்படக் கற்றல் வேண்டும். பிற நாட்டு மொழிகளை அந்நாட்டவர் கற்பதை யாவரு முணர்வர். மொழிப்பயிற்சியற்றவர், தேசப்பணியும் மறப்பர். சமயப்பற்றும் இழப்பர். நவநாகரீகந் தாண்டவமாட அவர் வாழ்வர். இன்ன தன்மை யுடையவரால் உலகத்திற்கு நன்மை யாதேனும் உண்டா? உலகத்திலுள்ள எல்லோராலும் நன்கு மதிக்கப்படும் ஞானபானு போன்ற மகாத்மாகாந்தி யவர்கள் போன்று, பல இளங்காந்திகள் தோன்ற வேண்டும். அன்பு, இரக்கம், பொறுமை, நல்லொ ழுக்கம் என்பன சிறக்க இளைஞர்கள் வாழ வேண் டும். அவர்களின் சாத்விக குணமே உலகத்துப் பெருமை உண்டாக்கும் வழி.

இப்பொழுது நிகழும் காலமும் இனி வருங் காலமும் ஒவ்வொரு இளைஞரிடமும் அடங்கிய அறி வின் பாலதாகும். ஆகவே, இளைஞர்கள் கல்வி கேள்விகளில் மேம்பாடுடையவராகவேண்டும் அதற் காகக் கடைகளில் ஏதும் வாங்கவேண்டும் என்பது கருத்தன்று. உண்மை உழைப்பை ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெரியாரும் தங்கள் தங்கள் இளம புதல் வர்க்குக் கொடுத்தல் வேண்டும். உயர்ந்த அறிவு நூல்களைச் செல்வத்தினும் சிறக்க நற்றுணையானது கல்வி என்பதை யாவரும் நினைக்க வேண்டும். ஆங் கிலம் முதலிய மொழிகளைக் கற்ருல், பல தொழின் முயற்சிகளையும் பரப்ப வழி உண்டாகும். சிவாஜி போன்ருர் சரித்திரங்களும், பத்மினி, மங்கம்மாள் போன்ற பெண்மணிகள் வரலாறுகளும் இளைஞர் களுக்கு ஊக்கம் அஞ்சாமை, வீரம் முதலிய அருங் குணங்களை வளர்ப்பனவாகும் இந்திய நாட்டின் பெருமைக்கு ஜகதீச சந்திரபோஸ், சி. வி. ராமன் போன்ற பெரியார் கண்ட அறிவுடைச் செயல்கள் அச்சாணி போலப் பயனுடையதும் எடுத்துக் காட் டும் என்னலாம். எனவே, கலைகள் பல கற்று அறிவை விசாலப்படுத்தி இளைஞர்கள் திகழ்ந்தால் நமது ஈழநாட்டுப் பெருமை உலகம் எங்கும் போற்ற நிற்கும். இந்தியர் என்னுமளவில் மேனுட் டவர் மதியாத காலமும் இருந்தது. ஆனுல், "கல்வி, கைத்தொழில் முதலிய துறைகளில் இந்தியர் சிறந் தவர், அவர்கள் தெய்வ வழிபாடுடையவர்கள்" என்று எழுதிய சில புத்தகங்களும் உண்டு. தாழ்வை நாம் பாராட்ட வேண்டாம். இனி வருங் காலத் தில் தமிழ்மக்களின் பெருமையைச் செயலளவில் விளங்கச் செய்தல் வேண்டும்,

முன்னோரின் ஒழுக்காறு:—முன்னைய தமிழ்மக்கள் ஐந்து நிலங்கள் பற்றியே பிரிக்கப்பட்டிருந்தனர். பாலை நிலத்துக்கெனத் தனியே இடம் வகுக்காது நானில மக்களென்ற பழந்தமிழ் நூல்களுமுள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகத் தமிழ்நாட்டு மக்கள் மூவரசர் காலத்தில் தெய்வம் பரவி, செய்வன திருந்தச் செய்து அறத்தோடு வாழ்ந்தனர். கல்வியில் திருவில் கனிவிய வாழ்க்கையுடைய அவர்களின் பெருமை அளவிடற்பாலதன்று.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னா தவருள்
அறிவுடையோ னா(று) அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

(புறநானூறு-153)

இப்பழைய பாடல் பாண்டியன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் பாடியது. கல்வி கற்கவேண்டிய அவசியமும், பொருள் கொடுத்துக் கற்றல் வேண்டும் என்பதும், கற்றோரை வயசு குறியாது யாவரும் மதிப்பர் என்பதும், அரசனும் அறிவுடையொருவனை நன்கு மதிப்பான் என்பதும் பிறவும் விளங்கக் காட்டப்பெற்றன. இவைகளை இக்காலம் நாம் கைக்கொண்டால் உயர்வடைவது நிச்சயமாகும்.

இன்னும், பண்டைய நன்மக்கள் விருந்து புறந்தரும் அரிய கொள்கையைப் பெரிய அறமாய்க் கொண்டமை பின்வரும் கருத்தாற் பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாதிருத்தற்கு அமிழ்தம் சாதனமாகும் என்பர். அத்தகைய அமிழ்தங் கிடைத்தாலும், அதனைப் பகுத்து உண்ணும் பெருங் குணமும், கோபமின்மையும், சோம்பலின்மையும். பாவத்திற்குப் பயந்து நல்லன கடைப்பிடித்தலும், உண்மைப்புகழ் கிடைக்குமானால் உயிரை விடத் தயங்காமையும், உலகமே கைம்மாறாக எய்துவதாயினும் பழித்தொழிலின்மையும், ஊக்கத்தை ஆக்கமாகக் கொண்டு தமக்கென வாழாது, பிறர்க்குபகாரஞ் செய்தலையே குறிக்கோளாகக் கொண்ட பெருமையும் முன்னைத்தமிழ் மக்கள் மாட்டு நிலவி நின்றமை புலப்படும். தற்காலம் இன்னோரன்ன அரியகுணமுஞ் செயலும் மலையேறி விட்டன. தற்பெருமை, தன்னயவிருப்பு, வஞ்சகம், பிறர்குடியைக் கெடுத்தல் முதலியன தலைவிரிகோலமாக நிற்கின்றன. ஆதலின், அக்கால மக்களுக்கும் இக்கால நவநாகரிகர்களுக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றதென்றறிக. சூதாட்டத்தில் உள்ள கவனம் தருமவழியானால் எவ்வளவு நலந் தரும். இவை நிற்க;

* * *

மணலுள், மூழ்கி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்.

பிறரை இகழ்ந்து தன் கருமம் சாதிக்கும் அறிவிலி தானே கேடடைவான் என்பது பழைய நீதிநூல். புதியகாலச் சுழற்சிக்குப் பொருத்தமில்லாமலிருக்கலாம். ஆனால், சிலகாலம் போனால் உண்மை விளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். ஆகவே, நூல்கள் நமக்கு உவமைகளோடு தெரிவிக்கும் அரும்பொருள்களை நன்கு சிந்திக்க வேண்டும். இக்காலத்தில் வேண்டும் அரிய ஒழுக்கங்களைச் சுருங்கிய அளவில் இளைஞர்கள் பின்பற்றவேண்டும். வெற்றி ஒன்றனையே கருதி வீண் உரைகளைக் கற்றூர் முன் பேசுதல் நலந் தரமாட்டாது. நாஸ்திக வாதிகளுக்கு இவைகள் கசப்பாக இருக்கும். நாம் உண்மையை அஞ்சாது விளக்க வேண்டும் கல்வியறிவு மிகுந்து மக்கள் வாழவேண்டும் என்ற பெரிய எண்ணம் முற்கால அரசர்களிடம் இருந்தது. தசரதன், கரிகாற் பெருவளத்தான் இராஜராஜசோழன் என்பவர்களுடைய ஆட்சிமாட்சி யளித்தமைக்குக் கல்விதான் முக்கிய காரணம் என்னலாம்.

"வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்
பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்றுதான் அறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் இது
வாழும் முறைமையடி பாப்பா! (பாரதியார்)

இவை இளைஞர் கைக்கொள்ளுதலால் காலத்தைச் சிறப்பிக்க ஏற்றவழி உளதாம்.

பெண் பெருமை:—பெண்களின்றி உலகம் பெருக்கமடைதல் இல்லை. அஃறிணைப் பொருள்களிலும் ஓரறிவுடைய தாவரங்களிலும் பெண் என்பதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகுபாடு உண்டு. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் மங்கையரை இன்றி இல்லறமில்லை என வரையறை கூறிற்று.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

இதனால், இல்லறம் புகுந்த காலம் முதல் நாயகன் நாயகி ஆகிய இருவரும் இன்புடன் பிரியாது வாழ வேண்டும் என்பதை நிலைநிறுத்துதல் கவனிக்கத் தகும்.

அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப் பொறையும்

* * *

விறன்மந்திரி மதியும்
பேசிலிவை யுடையாள் பெண்.

என்பது இயற்கைச் சித்திரமல்லவா ?

“நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகார மென்றோர்
மணி ஆரம்புனைந்த தமிழ் நாடு”

என்ற பாடற்பகுதியில் வரும் சிலப்பதிகாரம் தமிழணங்கின் திவ்விய பாதாரவிந்த அணியாய் மிளிர்வது. பெண் பெருமைக்கு உறைவிடமாக இருக்கும் இதனை இளங்கோ அடிகள் தந்தார்கள். “வானம் பொய்யாது, வளம் பிழைப்பறியாது, நீணில வேந்தர் கொற்றம் சிதையாது” என்னும் பகுதிச் செழும் பொருளைச் சிந்தையுட் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரமன்னன் கண்ணகிக்கு ஆலயம் அமைத்தான். பிறநாட்டு மன்னரும் பத்தினிக்குக் கோயில்கண்டு பரவி வழிபாடு செய்தனர்.

ஒரு தாயுரை:—நன்மகனைப் பெற்றுவிடல் தாயின் கடமை என்றும், அப்புதல்வனை அறிவுடையனுக்கு தல் தந்தையின் கடமை என்றும், வேல் செய்து கொடுத்தல் கொல்லற்குக் கடமை என்றும், நல் லொழுக்க வழிப்படுத்தல் அரசன் கடமை என்றும். தேசபாதுகாப்புக்காகச் சமர் நேரிடில், பகைவரை வென்று வீரமொடு மீளல் அவ்விளைஞனின் கடமை என்றும் விளக்கும் பாடல் கடமையுணர்ச்சி ததும்ப வாழ்வதற்கு வழி காட்டுவதாகும்.

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே!
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே!
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே!
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

ஒவ்வொரு குடியினும், ஒவ்வொரு சமூகத்தி னும் கல்வியும், ஒழுக்கமும் சிறந்து நின்றன. இக் காலமும் அன்னவாறாக அரசரும், நாட்டாண்மைக் கழகப் பெரியாரும் துணைபுரிந்தால் யாவரும் அறி ஞராக ஏது உளதாம். மஹாமஹோபாத்தியாய— டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் புரிந்த நன்மைகள் எழுத்தில் அடங்குவன அன்று. அவைகள் நீடு வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் விசேஷ கடமைகள்:—

தேசபக்தி என்பது ஒவ்வொரு இளைஞர்களிடத்து மிருக்க வேண்டும். தேசத்துள்ள ஏழைகள் மீது அன்பும் இரக்கமுமிருந்தால் யாவரும் புகழும் பெருமைதானே கிடைக்கும். புகழை நாமே விரும்ப வேண்டாம். அரசனிடமும் கடவுளிடமும் பணிவும் அன்பும் உண்டாக இளமையில் பழகிக் கொள்ள வேண்டும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது பழமொழி. வீரம் மிக்க உள்ளத்தோடு இளஞ்சிறுர் விளங்கினுல், அஃதே பெரிய பணிகளுக்கு அச்சாணியாக நிற்கும். நளமகாராசனிடம் அவனை அறியாது அவன் புத்திரன் இளமையிற் கூறியதாக வரும் பாட்டு அஞ்சாமையின் உயர்வைத் தெரிவிக்கும்.

"நெஞ்சால் இம்மாற்றம் நினைந்துரைக்க நீயல்லாது
அஞ்சாரோ மன்னர் அடிமடையா"

என்று திடமுடன் கூறி, எங்கோமான் வாய்மையே நாடு விட்ட காரணம் என்பது எத்தகைய சிறப்புடையது!

சமயபக்தியும் இளைஞர்களிடம் வளரவேண்டும். சமயம் என்ருல் இன்னது என்று அறியாதவர் பலர். அநேக சமயங்கள் நமது இந்தியாவில் இருக்கின்றன. சமய தூஷணைபுரிவது கெட்ட செயலாகும் நாம் சைவசமயிகள் என்பதை மறவாது ஒழுகல் தான் தக்கமுறையாகும். தாயுமான சுவாமிகள் அழைப்பதைப் பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயமே சமயம் சமயாதீதப்
    பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள் வெளிகாட்டு
    மிந்தக்கருத்தை விட்டுக்
பொய்வந் துழலுஞ் சமய நெறி
    புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
    சேரவாருஞ் செகத்தீரே.

இன்னவாறே இன்பமாக யாவரையும் சகோதரர்களாக எண்ணி அழைத்து மகிழ்வது நன்மையாகும். அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே! என்பது எப்பொழுது கிட்டுமோ? அறியேம்.

( காதற் கிழமையில் கடவுள் நினைவு )

உள்ளம் வரம்பு கடவாது நிற்கத் தமிழ் நாட்டில் வாழ்க்கை நடத்திய பெரியார் பலர். திருத்தொண்டத்தொகை பாடிய நம்பியாரூரர் திருவாரூரில் பரவை நாச்சியாரைக் கண்டு காதல் கொண்டபோது தெய்வத் திருவருளை வழுத்துகின்றார். அவ்வம்மையாரும் தியாகேசர் திருவருளைப் போற்றுகின்றார்.

தேவாரத்தினும் இறைவனையும் உயிரையும் நாயகன் நாயகி பாவத்தில் வைத்துத் துதிப்பதுங் கவனிப்பதற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னமவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பேர்த்துமவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

அத்துவித நித்தியானந்தப் பெருவாழ்வுதான் என்றும் இன்பந்தரும் இத்தன்மைத்தாஞ் செந்தமிழ்ப் பொழிலில் உதிர்ந்த சமய தத்துவ நன்மலர் வேறெந்நூலினும் அகப்படாது. என்னை? அவை மானுட உடம்பு கிடைத்தமையை உள்ளவாறே உணர்ந்தார்க்குப் பேரின்பமே விழுச் செல்வமாகக் காணப்படுதலின் என்க.

கற்றதனாலாய பயனென் கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

சமய வளர்ச்சி:— இளைஞர் கடமையுட் சமயம் என்ற ஒரு நிலை வேண்டும் என்று காட்டினும். சமயத்தின் உண்மையை நமது பாரத நாட்டு மக்கள் மிகவு முணர்ந்து வழிபாடு செய்து வந்தவர்கள். உயிரின் மறுமைப் பயன் கருதியே இம்மை வழிபாடு வேண்டப்பட்டது. மறுபிறப்பு இல்லை என்பாரும், எல்லாம் இவ்வுலகுடன் சரி என்பாருமிருக்கிறார்கள். அவர்களும் கூர்ந்து அறிவை நன்னூல்களிற் செலுத்தினால் நல்வழிக்கு வருவார்கள். பல பிறவிகளிலும் செய்த அரிய புண்ணியத்தால் மானுடரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினேம். இலகுவில் ஆன்மலாபத்தை — பிறவிப் பெரும் பயனை—அடைய இப்பிறவியே ஏற்றதாகும். " நால்வர் வழியை நாடு " என்பர் பெரியோர்; திரு ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் என்ற நான்கு சமயகுரவர்களைச் சுட்டியே இன்னணம் புகல் வர். விபூதி, உருத்திராட்ச தாரணராய் அவ்வடியார் வாழ்ந்தனர். அப்பரை ஓவியத்துள் வைத்து விளக் கும் சேக்கிழாரடிகள் பாடலைப் பாருங்கள்.

தூயவெண்ணீறு துதைத்த பொன்மேனியுந்
 தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும்
 நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
 பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர்
 வீதியுளே.

புறச்சாதனங்களோடு அன்பகத்துடன் வணங்கும் அடியார் இன்பநெறி கூடுவர். சமய குரவர், சந் தான பரமாசாரியர் முதலியோர் சமயம் வளர்த்தனர். மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம் மையார் என்ற நங்கையர்களும் சமயம் வளர்த்து உத் தம வழி காட்டினவர்களே ! ஆனல் என்ன; இப் போது சமய போதனையும் நாஸ்தி, சமய வழிபாடு களும் பூச்சியம். சமயம் வளர்க்க வைத்த மடாதிபதி களும் உல்லாச வாழ்க்கையில் நிற்கின்றனர் ! இந்த நிலையில் சமயம் எங்கே வளரும்? சித்தாந்தப் பெரு நெறி எங்கே கிடைக்கும்? தமிழ்மறை எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலங்கும்? தமிழ் மொழி எப்படித் தழைக்கும்? அன்பரீர்! சிந்தியுங்கள்! "சோறு மணக்கும் மடங்கள் எல்லாம்" என்று ஒரு பெரியார் பாடினார். தெய்வ மணக்குஞ் செய்யுளெல்லாங் கற்றுத் துறைபோய நற்றவ ஒழுக்காறுடைய பெரியார், மடாலயங்களைச் சமய பரிபாலனமும் செந்தமிழ் வளர்ச்சியும் தேவ உண்மையும் திகழச்செய்ய ஏதுவாமாறு செய்வது பெரிய கடமையாகும். வெளியாடம்பரமும், உத்தியோகஸ்தர் உபசரிப்பும் இக்காலம் குறையவில்லை. இப்படியே வீண் விவாதங்களிலும், உத்தியோகஸ்தரை உபசரிப்பதிலும் பொதுப் பணம் விரையமாதலைத் தடுத்துச் சமய வளர்ச்சிக்கும், கற்றோரை ஆதரித்தற்கும் அத்தருமநிதி உபயோகமாகும்படி செய்வதும், சமய பாடங்களையும் ஓரளவு தமிழ் நாட்டுச் செல்வச் சிறார் கற்கச் செய்தலும் மிக்க அவசியமாகும். எழுதினாலும் மேடைகளிற் பேசினாலும் சமயம் வளர்ந்துவிடமாட்டாது. சித்தாந்த வித்தியாசாலை என்று பெரிய எழுத்தில் வெளியே தீட்டினாலும் போதாது! மடாதிபதிகளையும் பிரபுக்களையுந் தட்டி எழுப்பிச் சமயப்பணி, செந்தமிழ்த் தொண்டு, தேசசேவை ஆதியவற்றை செய்யவும் செய்விக்கவும் ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மங்கையும் முன் வர வேண்டும். அறம் வளர்க.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்
சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம்
வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலக மெல்லாம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமையிற் சிறந்து விளங்கிய

# புராதன மன்னர்கள்

பண்டைக்காலம் நமது தமிழ் செழித்திருந்தது. அரசர் பெருமக்களின் தமிழ்ப் புலமையே அதற்குக் காரணம். புலவர் என்ற பேரை மலிவாக வாங்கிச் சூட்டலாம்.

அக்காலம்போல வயிரமான ஆழமான உணர்ச்சி இப்போது இல்லை. கல்விக்குப் பல சட்டம் கிட்டம் அப்போது இல்லை. தமிழன்னையின் பூரண தயவுமட்டும் அதிகம் புலவர் ஒரு பாட்டுக் கூறிஞல் இக்காலப் பணக்காரர் சிலர் சினப்பர்.

அக்காலம் அரசர்கள் தாம் பாடவும், பாடியதைக் கேட்டு மகிழவும் தமிழன்னை கொலுவீற்றிருப்பாள். புலவரை மதியாது வைத்திழக்கும் தேனீ என்பதற்கு இலட்சியமானவரைப் பற்றிப் பேச்சில்லை.

ஒருநாள் இராஜ ராஜசோழன் ஒட்டக்கூத்தர் தமது ஆசிரியர் என்ற பற்றைவிளக்கி ஒரு பாட்டு மீதியையும் பாடி நிறைவு செய்தான். இக்காலம் ஆசிரிய மாணவ வேறுபாடே இல்லை. பணிவு இன்றிய துணிவு என்னபயன் தரும்? நேயர்களே! கவனியுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடுங்கடைமணி நாவசையாமல் அகிலமெல்லாம்,
நீடுங்குடையிற் றரித்த பிரானென்பர்"

(கூத்தர் வாக்கு)

—நித்தநவம்

பாடுங் கவிப்பெருமான் ஒட்டக்கூத்தன் பாதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றே யெனைச்சொல்லு
[வரே

(அரசன் வாக்கு)

இத்தகைய அன்புக்கு எவ்வளவு பெருமை. இது ஒரு புறமாக,

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்ற ஒரு அரசன் இருந்தான். இவன் தலையாலங்கானத்தில் இருந்தவன். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு யுத்தஞ்செய்து அவனைச் சிறைப்படுத்தியவன். புலமை மிக்கவன். சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்பவரையும் நெடுஞ்செழியன் வென்றான். இவன் வேள் எவ்வி யின் மிழலைக்கூற்றம் என்பதையும்; வேளிருடைய முத்தூற்றுக் கூற்றம் என்பதையும் கைக்கொண்டவன்; மறக்கள வேள்வியும், அறக்கள வேள்வியும் இவனாற் செய்யப்பட்டன. புலவன் என்ற பேர் மட்டுமுடையவன் அன்று. கவிஞர் பெருமகனாக இவன் திகழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குடிமருதனூர் இயற்றிய மதுரைக்காஞ்சி என்ற அரிய பிரபந்தத்திற்கு நெடுஞ்செழியனே தலைவனுவான். ஆலந்தூர்க்கிழார் செய்யுளின் கருத்து வருமாறு:-

பசுவினது மடியைக் கெடுத்த தீமையுடையார்க்கும், மாண்பமை ஆபரண மணிந்த நங்கையரது கர்ப்பத்தை அழித்தவர்க்கும், பார்ப்பாருக்குப் பிழை செய்த கொடுந்தொழிலாளர்க்கும், அவரவர் செய்த பாதகச்செயலை ஆராயுமிடத்து அவ்வவற்குப் பிராயச்சித்தம் உண்டு. நிலம் கீழ்மேலாம் காலமாயினும் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்க்கு நரகம் நீங்காது. இப்பாடல் பரிசில் பெற்றுப்போகின்ருனை, இன்னும் நீ எம்மை நினைத்து வருவாயோ என்ருர்க்கு, இவ்வாறு பேருதவி செய்த நின்னை வளவன் வாழ்க என்று பாடேனுயின், நான் இருக்குமிடத்தில் பல கதிர்களையுடைய சூரியன் படுதலறியான். இதற்கு இம்மையின்பம் பெறேன் என்றும், செய்ந்நன்றி கொன்ருர்க்கு உய்வே கிடையாது. மறுமையில் துன்பமே கிடைக்கும் என்றும் கூறியதை அப்புலவர்கள் செய்த பாடல்களால் அறிந்து நாம் மகிழலாம்.

ஆன்முலை யறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயுமுளவென
நிலம்புடை பெயர்வ தாயினுமொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தியில்லென
அறம் பாடிற்றே ஆயிழைகணவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழிபயிற்றி
யமலைக் கொழுஞ்சோ றூர்ந்தபாணர்க்கு
அகலாச் செல்வ முழுவதுஞ்செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்கவென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடேனாயின்
படுபறியலனே பல்கதிர்ச் செல்வன்
சான்றோர் செய்த நன்றுண்டாயின்
இமயத்தீண்டி யின்குரல் பயிற்றி
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பஃறுளியினும் வாழிய பலவே.

பல்லாண்டு வாழிய என்பதற்கு மழைத்துளியை உவமித்தது மிகவும் பாராட்டற்குரியது. பசுவதை எங்குஞ் சொல்லப்படாமையின் ஆன்மடியையும், கருச்சிதைத்தல், பார்ப்பார்ப் பிழைத்தல் முதலிய வற்றையும் கூறிய புலவர் மாணெறிச் செல்கை மிகவும் போற்றற்பாலதே. நெடுஞ்செழியனைக் கருவூர் முற்றுக்கைவிடுக என்னுங் கருத்தமைதியில் கூறியது. சந்திசெய்யும் பெற்றியும் புலவர்க்குண்டு. புலவர் மந்திரிகளினும் பெருமை வாய்ந்தவர்களேயாவர்.

கொன்றாலுஞ் சரி, கொல்லாதுவிட்டாலுஞ் சரி. இவற்றால் வரும் உயர்ச்சிபற்றி யாம் கூறவேண்டாம். நீயே எண்ணுங்கால் புலனாகும். செறிந்த உள்ளிடு பருக்கையையுடைய சிலம்பினையும் நீண்ட கோற்றொழிலாற் செய்யப்பட்ட குறிய வளையினையுமுடைய மகளிர் பொன்னாற்செய்த கழலான் வேதிகை போல உயர்ந்த மணலில் இருந்து விளையாடுமிடமுளது. பக்கத்தே குளிர்ந்த ஆன் பொருந்தத் தினது வெளிய மணல் சிதற வலிய கையையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லன் அரத்திஞல் அராவிக் கூர்மை செய்யப் பட்ட அழகான வாயிஜேயுடைய கோடாலி வெட்டு தலால் நின்ற நிலேமாறி விழும் பூமணக்கும் நெடிய கிளேகள் தனிக்கச் சோலேகள்தோறும் காவல் மரங் களே வெட்டும் ஓசை தன்னுடைய ஊரிலே நெடிய மதில் எல்லேயில் தனது காவலேயுடைய கோயிலினி டத்து சென்ருெலிப்ப அவ்விடத்து மானமின்றி இனிதாக இருந்த அரசனுடன், இவ்விடத்து உனது இந்திரவிற்போலும் மாலேயையுடைய முரசொலிப்ப பொருதாய் என்பது கேட்டார்க்கு நாணம் தரும் தகுதியுடையது. ஆதலால் அப்போரை ஒழியத்த கும் என்று சாதுரியமாகப் பாடியதை நோக்குக இந் திரவில்லின் உவமானம் பலநிற மலர்மாலே வென்றி தோன்ற அணிதலின் பண்பாட்டை விளக்கும். புல வர் வாக்கை அரசர் மதித்தமை தெளியலாம். புல வர் கடைச்சரக்குப் போன்றவரல்லர். தமிழன்பர்கள் தமிழ் வளங்காண்பது எந்நாளோ? அறியேம்.

அரசர்கள் புலவரிடத்து வைத்த பேரன்புக்கு எல்லே என்பதே இல்லே. பிசிராந்தையாரைக் கோப் பெருஞ்சோழன் காணவில்லே. அன்புக்கு அவன் ஒரு உறையுளாய் விளங்கிஞன். உணர்ச்சியான் மிக்க நட்பும் பிசிராந்தையார்க்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இடையீடின்றி இருந்தது. அதஞல் அவன் பிசிராந்தையார் வரமாட்டார் என்ற புலவர் களிடம் கூறியது மிகவும் சிறந்த மொழியேயாகும். பொதியமலேயையுடைய பாண்டிநாட்டைச் சேர்ந்த பிசிர் என்னும் ஊரிலுள்ள அப்பெரும்புலவர் நிச்ச யம் வருவார். அவர் எம்மிடத்துச் செல்வமுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்து வராவிட்டாலும் நான் துன்புறுங்காலத்து வராதொழியார் என்ற அரசவாக்கை நாம் சிந்திக்க வேண்டும்.

கம்பநாடர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியாரை இராமாவதாரத்துள் வைத்தமை யாவரும் அறிவர். "சடையன்றன் கொடையேயன்ன படைக்கலம் வழங்கினான்" என்பதும், "சடையன்றன் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என்பதும் பிறவும் புலவர் நன்றியைக் காட்டும்.

> "ஆன்பாலுந் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
> தேம்பாய் உண்ட மனம் தெவிட்டுமோ"

என்று கம்பர் இறுதியில் இசைத்தார். ஆனாலும் கல்லாடர் போன்ற கவிஞரும் நீங்காத நன்றியாளரே. செழியனை அவர் பாடியதை இங்கே தருவாம்.

வெண்மையில்லாத வலிய வயிரக் கம்பத்தில் கட்டப்பட்ட யானை, அக்கூடத்தில் நிற்றலை வெறுத்துச் சென்று, படிந்து, நீருண்டு கலக்கிய துறையையும், கார்காலத்து நறிய கடம்பினது பச்சையிலையோடு கூடிய மாலையையுடைய சூரபன்மாவைக் கொன்ற முருகனது கூளிச் சுற்றத்தைப் போலும் உனது கூரிய அம்பினையும், வளைந்த வில்லினையுமுடைய வீரர்களால் பகைவரை அழிக்கும் பெருமை உனக்குளது. உலகம் பாரந்தாங்காது நெளியத் திரண்டசேனை தங்கிய தலையாலங்கானத்தை யுடை

192 R-C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோன் என்றும், காலன் போலும் வலிமையுடை யோன் என்றும் கல்லாடர் வியப்பர்.

"ஞாலம்நெளிய வீண்டிய வியன்படை
யாலங்கானத் தமர்கடந்த தட்ட
கால முன்பநிற் கண்டனன் வருவல்"

என்ற பகுதி நோக்குக.

நமது யாழ்ப்பாணத்துப் பரிசிலீந்த வள்ளல்கள் பலர் மறைந்தனர். தமிழிற் சிறந்த அன்பர்கள் பலர் புலவர்களை நன்று பாதுகாத்த சீரியோர் பாடலில் துலங்குகின்றனர். அந்தகக்கவி வீரராகவ முதலியாரை மதித்துப் பரராசசிங்க அரசர் வளநாடும் இளங்கன்றும் பொற்பந்தமும் பரிசளித்தார். இது கற்பனையன்று. சில நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சமாசாரம்.

பொங்கு மிடியின் பந்தம்போயதே என்கவிதைக்கு
எங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந் தமான வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது.

வண்ணைத் திருவாளர் வைத்திலிங்கச் செட்டியார் என்ற தனவானும் புலவாணர்களை உபசரித்துச் சன்மானித்தனர். யாழ்ப்பாணத்துப் பல பிரபுக்கள் இருக்கின்றார்கள். தமிழ் என்றால் வெறுப்பவர் மலிந்துவிட்டனர். நமது மொழியும் நாடும் தாயினும் சிறப்பாகப் போற்றத் தக்கன. இனியாவது விழிப்பார்களானால் ஒரு தமிழ்ப் பெருஞ்சங்கம் நடத்த இடமுண்டு. தமிழ் என்ற இனியமொழி தழைக்கத் தமிழ்ப்புலவர் களிக்க வேண்டுவன செய்து வாழ யாவரும் முன்னி முன் வருவார்களாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# ஐம்பெரும் நிலங்களில்

# அழகொளிர் மருதம்

——:O:——

இவ்வுலக மக்களில் தமிழகத்தவர் சிறந்தவர். எதனுல் பலவகை உணவுப் பொருள்களைத் தாமே உண்டாக்கி நாகரிகமாக வாழ்ந்த பெருமை தமிழ் மொழி பேசுந் திருவுடையார்க்குப் பரம்பரையாக அமைந்திருந்ததனுல் என்க.

மருத நிலத்தை ஒரு அரசனுகக் கவிச்சக்கர வர்த்தி கம்பநாடர் விளக்குவர். அச்சித்திரக் கவி வருமாறு :-

தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக் [கத்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கு மாதோ.

சோலையின்கண் மயில்களாடவும், தாமரைகள் பூவாகிய விளக்கைப் பிடிக்கவும், மேகங்கள் முழவம் போலக் குமுறவும், குவளைகள் மலர்களாகிய கண் களால் பார்க்கவும், தடாகத்துள்ள திரைகள் திரைச் சீலைபோலக் காணப்படவும், வண்டுகள் மகரயாழ் போலப் பண்பாடவும், மருதநிலமாகிய அரசன் மகிழ் வுடன் வீற்றிருக்கின்ருன் என்ற வர்ணனை உண்மை நாடுவார்க்கு ஓவிய இயற்கையைத் தெரிவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலர் என்ற பொய்யா நாவுடைப் புலவர் குறிஞ்சிநிலப் பண்பில் இந்தச் சித்திரத்தைப் பொறித்துக் காட்டுகின்றார்.

ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாக
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் றுதைகுர லாக

★

மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் களிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
நனவுப்புகு விறலியற் றேன்று நாட!

என்பதாம்.

மருத மாநிலத்தில் சிறுமகளிர் விளையாட்டின் செவ்வியைச் சேக்கிழாரடிகள் அருமையாக அமைத்தார். செல்வமலி சிறப்பும் அதனால் விளங்கலாம்

கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரியுலைப் பெய்தங்(கு)
அயலாமை அடுப்பேற்றி யரக்காம்பல் நெருப்பூதும்
வயன்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம்.

"நாடா கொன்றே காடாகொன்றே அவலா கொன்றே மிசையா கொன்றே எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழிநல்லை வாழிய நிலனே" என்றார் பிறரும். நாட்டுமக்கள் முயற்சியே நகரமாந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குக் காரணம். மக்களின் இன்பவாழ்வும் நிலவியல் பற்றியதே. அதனுல் துறை அகமும், புறமும் என்ற பாகுபாடுற்றது. அகத்துறையின் மருதநில மக்கள் ஒழுக்காறு விழுப்பந் தருவதாம். அதனைச் சற்று ஆராய்வாம். மருதநில மாட்சி நாற்பது பாடல்களால் அகநானூறு விளக்கும். சில சுருக்கிக் காட்டுவாம்.

மருதநில மக்கள் அன்பானுய ஒழுக்கமுடையர். இதனையே களவு என்று கூறப்படும். தாய் தந்தையர் கொடுக்க ஏற்காது தலைவன் தலைவியர் தம்முள் கரந்த உள்ளப்பண்பால் புணர்ந்து இன்புறும் களவாகும். பிறர்க்குரிய பொருளை மறைவாகக் கொள்ளும் களவு இது அன்று. "ஒத்த அன்பினராய் இன்பத்துறையில் நின்று இல்லறம் புரிந்தாரைப் பின்னர் வீடு பேற்றின்பம் உறுமாறு வஞ்சித்துக்கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையின் களவியல் என்னும் பெயர்த்து என்பது இறையனுரகப்பொருள் முதற் சூத்திரவுரை. கற்புத்தான் தமிழ்மக்களின் முதன்மையான ஒழுக்காருகும். அதாவது தலைவியை அவளுடைய பெற்ருேர் வேள்விச் சடங்கொடு நல்கத் தலைவன் அந்நங்கையை வரைந்து இல்லறமாகிய நல்லறம் பேணுதல்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"
(தொல். கற்பு: 51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய தமிழ்மக்கள் சிறந்த மணமுறையுடையர். அகநானூற்று 86-ம் செய்யுட் கருத்து மிக்க சிறப்புடையது. தீமைவிளைக்கும் கிரகங்கள் இடம் பெயரச் சந்திரன் உரோகிணி என்ற நாளுடன் சேரும் குற்றமற்ற உயர்ந்த நன்னாள் வந்தது. அந்தத் தருணத்தில் தட்பமுடைய திருமணப் பந்தரில் புதுமணல் பரப்பினர். பூமாலை முதலியவற்றால் அப்பந்தல் சிங்காரிக்கப்பட்டிருந்தது. தீபநிரை வரிசைப்பட ஏற்றப்பட்டு ஒளிகான்றது. பல பெரியோர் திருமணங்காணிய அழைக்கப்பட்டிருந்தனர். ஆண்டு பல நிரம்பிய மூதாட்டியார் தத்தம் தலைமீது நீர்க்குடங்களைத் தாங்கி முன்னும் பின்னுமாக மாறி மாறிக் கொடுப்பர். புத்திரச் செல்விகளாய நான்கு பேர் "இம்மணப்பெண் கற்புத் தவறாத காரிகையாய்க் கணவன் விரும்பத்தக்க மனையாளாய் நன்கு வாழுக" என்று வாழ்த்தி மணமகளை நீராட்டுவர். பின்பு, பெற்றோர் நீ பெரிய இல்லற முதல்வியாவாய் என்று வாழ்த்தி மணமகனிடம் நல்குவர். திருமணவீட்டில் பெருஞ்சோற்றுக் குவையுளது. அதனைப் பகிர்ந்து பல்லோரும் உண்டு களிப்படைவர். செல்வமிக்கது அக்காலம்; 'ஐயாச்சாமிக்கு கல்யாணம் அவரவர் வீட்டில் சாப்பாடு" இக்காலம். நிற்க;

திருமணம் முற்றிய அன்றே தலைவனும் தலைவியும் ஒன்று கூடினர். தலைவி தன்னிடம் அன்புடையவளாக இருப்பதை வாயில்மறுத்த தோழிக்குக் கூறி, நீ வாயில் மறுத்தமை தகாது என்றான் தலைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினேர் கொடுப்பக்கொள் வதுவே,
(தொல், கற்–1)

இதனுல் திருமணத்திற்கான கரணங்கள் நிகழ்ந்த முறையும், தமர் மனமொப்பி அளித்த தன்மையும் தெளியலாம். சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானும், தமர் அறிய மணவறை சேரலானும் களவாற் சுருங்கி நின்ற தான் சிறந்தமையைப் பின்னர்த் தலைவன் வினவ, அவள் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனனே இது களவின் வழி நிகழ்ந்த கற்பாயிற்று என்று நச்சினர்க்கினியர் குறிப்புரை கூறியமை காண்க.

ஒருநாள் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையை நினைந்து போய்விட்டான். அங்கே அவன் பரத்தையோடு காவிரி ஆற்றில் வேழவெண்புணை தழுவி நீராடினன். நாட்கள் சில சென்றன. அத்தலைவனுக்குத் தலைவியின் நினைவு தோன்றிற்று. அவன் அவளிடம் வந்தனன். தலைவி குழந்தையுடன் இருப்பதைப் பார்த்து அவளைப் புகழ்ந்தான். தலைவி அவனை நோக்கி உறையூரில் காவிரியாற்றிலே கொறுக்கச்சியால் செய்யப்பட்ட தோணியில் காதணி முதலிய ஆபரணமணிந்த பரத்தையுடன் நேற்றுப் புனலாடிய நீ இன்று இங்கே வந்து தான் கற்புடையாள் என்றும், புதல்வன்தாய் என்றும் நயமொழிகளைக் கூறி என்னை இகழ வேண்டாம். எம்முதுமைக்கு நாம் பொருந்துவோம். மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியின் கழார்நாடுபோல் எனது இளமை கழிந்து விட்டது. உன் பொய்மொழிகள் எவ்வாறு எனக்கு இனிமை தரும் என்று புலர்ந்து கூறினாள்.

கழைமாணுளினிழை நிவெய்யோளொடு
வேழவெண்புணை தழீஇப்பூழியர்
கயநாடியானையின் முகனமர்ந்தாஅங்
கேந்தெழிலாகத்துப் பூந்தார்குழைய
நெருநலாடினை புனலேயின்றுவந்
தாகவனமுலை யரும்பியசுணங்கின்
மாசில்கற்பின் புதல்வன்தாயென
மாயப்பொய்ம்மொழி சாயினைபயிற்றியெம்
முதுமையெள்ளல்அஃ தமைகுந்தில்ல
பல்வேள்மத்தி கழாஅரன்னவெம்
இளமைசென்று தவத்தொல்லஃதே
யினிமையென்செய்வது? பொய்ம்மொழியெமக்கே.

இக்கவியின் கருத்தே பரத்தையொடு பொழுது கழித்து நெடிது அனுபவம் பெற்றுவந்த தலைமக ேைடு தலைவி புலந்து சொல்லிய என்ற துறையில் ஐங்குறுநூறு என்ற பழநூற் கருத்துமாவது நோக் கலாம்.

பழனப் பன்மீ னருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணரூர!
தூயர் நறியர் நின் பெண்டிர்
பேஎ யனையமியாஞ் சேய்பயந் தனமே.

தலைவியின் குமாரன் மிக்க அழகு வாய்ந்தவன். அவனுடைய இனிய திருந்தர நன்மொழிகள் யாவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையும் வசப்படுத்துந் தன்மையன. வீதியில் அப் பச்சிளங் குழவியைப் பரத்தை கண்டாள். அச்சிறு வனது சாயல் தந்தையைப் போன்றது. அங்கே வேறு யாருமில்லை. "எனது உயிரைப் போன்ற குழந்தாய்! வருக" என்று அப்பரத்தை அவனைத் தழுவினள். இதனைக் கண்ட தலைவி பரத்தையை நோக்கி "குற்றமற்ற குறுமகளே! நீ ஏன் மயங் குகின்றாய்? நீயும் இக்குழந்தைக்கு ஒரு முறையில் தாய்தானே" என்று நன்குரைத்தாள்.

அதுகேட்ட பரத்தை தலைவியைக் கண்டு தன் களவினைத் தலைவி அறிந்தனள் போலும் என்று நாணி நின்றாள். தலைமகள் பரத்தையை அணங் கருங் கடவுள் என்றாள். இதற்கு உரையாசிரியர் பிறரை வருத்துகின்ற எய்தற்கரிய தெய்வ மகள் என்ற பொருளைக் காட்டுதல் நோக்குக.

யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுந ரின்மையிற் செத்தனள் பேணிப்
பொலங் கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன ணின்றோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமகள் எவன்பே துற்றனை
நீயுந் தாயை யிவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடன் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன் னோணின்
மகன்று யாதல் புரைவதாங் கெனவே.

இதனாலே தலைவியின் பரந்த நன்னோக்கும் நாகரிகப் பண்பும் சிறப்புடைத்தாக அமைதல் பேரின்பந் தரும் பொலிவு காட்டுமென்க.

காதற் பரத்தைக்குத் தலைவன்மீது மிக்க அன்புளது. அவள் சாதுரியப் பேச்சுப் படிக்கப் படிக்கக் கற்றோர்க்கு உள்ள மகிழ்வு அளிக்கும்பெற்றியது. இன்னும், உலகியலில் தலைவன் தனது மனைபுக்கது முதல், அவ்வழிப் பிரியாது அமர்ந்துள்ளானே என்று அயற் பரத்தையர் புகன்றதாக அறிந்து, காதற் பரத்தை தோழியிடங் கழறியதாக அமைந்த குறுந்தொகைப்பாவும் பாராட்டும் பண்புமிக்கது.

இன்னோரன்ன பலப்பல தமிழக மக்கள் கெழுதகை அன்பும் அறனும் பொதியப் பண்டைப் புலவர் பாடியன ஆராயின் இன்புதரும். தமிழ்த்தாயும் மகிழ்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# நானிலத் தமிழகத்தின் குறிஞ்சி நிலக்காட்சி

—:o:—

நமது தமிழகம் நானிலங்களையுடையது. அவற்றுள் குறிஞ்சி என்பதும் ஒன்று. குன்றமெறிந்த வென்றிவேற் குமரன் குறிஞ்சிநிலத் தெய்வம் என்பர்.

"சேயோன் மேய மைவரை உலகம்" என்பது தமிழ்ப் பெருங்காப்பியம். குமரனின் வீரம், அழகு, பேரருள் என்பவற்றை ஆராயுந்தோறும் ஒருவகை இன்பந் தோன்றும். மக்களும் பிறவும் இன்பத்தை விரும்புவது புதிய முறையன்று. குன்றவாணர் குமரனைப் போற்றிக் குன்ருத வளத்துடன் வாழ்வர்.

சாமியாடிக்கு வேலன் என்று பெயர். முருகக் கடவுளுடைய அருள்பெற வேண்டி அந்நிலவேடர் குன்றக் குரவை ஆடுவர். திருமுருகாற்றுப்படை நக்கீரர் செய்த பிரபந்தம். இதில் முருகப்பெருமான் பேரருளுடன் விளங்கும் இடங்கள் ஆறு என்பர். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதொருடல், பழமுதிர்சோலை என்பன சிறந்தவை. கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி போன்ற தலங்களிலும் குமரன் அற்புத நிகழ்ச்சிக



பொதுசன நூலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் அடியாரைப் புரந்தருளுகின்ருர். குறுந் தொகை பரிபாடல் என்ற நூல்களில் குமரன்மாட்சி கூறப்பட்டுளது. புறநானூற்றில் செந்திலம்பதிச் செவ்வேள் என்று பாராட்டப்படுதலும், அப்பதி மணலினும் நீ நீடு வாழ்வாயாக என்று பாண்டியனை வாழ்த்தியமையும் முருகன் பழமை விளக்கும். "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" என்பர் மணிவாசகர்.

"நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே" (புற-55)

இப்படியே குமரன் மாட்சியும், அருட்பொலிவும் பழைய நூல்களினுல் தெரியலாம். ஆறு உருவங் களின் திருவிளையாடலைப் பின்வரும் பாடல் விளக் கும்.

ஆடவோருருவஞ் செங்கையாறைய வோருருவம் நின்று
பாடவோருருவம் நாடிப்பார்க்க வோருருவம் ஆங்கண்
ஓடவோருருவ மோர்பாலொளிக்க வோருருவம் யாண்டும்
தேடவோ ருருவமாகச் சிவன்மகன் புரிதலுற்ருன்.

இவ்விளங் குமரனையே நக்கீரர் நம்பிப் புகழ்ந்து பெருவெற்றி பெற்ருர். திருமுருகாற்றுப்படையில் அவர் கூறும் பகுதியிற் சில வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோர் வணங்குவிற் றானைத் தலைவ !
மாலை மார்ப ! நூலறி புலவ !
செருவி லொருவ ! பொருவிறன் மள்ள !
அந்தணர் வெறுக்கை ! அறிந்தோர் சொன்மலை !
மங்கையர் கணவ ! மைந்த ரேறே !
வெல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ !
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ !
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே !
அரும்பெறன் மரபில் பெரும்பெயர் முருக !
நசையினர்க் கார்த்து மிசைபே ராள !
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய் !
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள் !
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள் !
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி !
போர்மிகு பொருந !

செரு - யுத்தம், விறல் - வலிமை, வெறுக்கை - திரவியம் போன்றவரே !, குன்றம் - கிரவுஞ்சமலை, கொற்றம் - வெற்றி, நசையினர்க்கார்த்தும் - விரும்பிய அடியாரை நிறைவுபெறச் செய்யும், அகலம் - மார்பு, இயவுள் - கடவுள்.

குறிஞ்சிக் கிழவனாகிய முருகனின் முழுதருட் சீர்மை குறுந்தொகையினும் வருகின்றது. அது,

“தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றியேய்க்கு முடுக்கைக் குன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சு புகவெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைகலெய் தின்று லுலகே”

என்பதாம். அத்திணையை ஆராயின் கற்பும் களவு மாகிய இருவகை மண நிகழ்ச்சிகள் உண்டு. கந் தர்வ விவாகமே களவு எனப்படும். இம்மணம் எப் பொழுதும் எல்லா நிலத்தும் நடந்தது அன்று. நற்குலத் தலைவனும், குறிஞ்சிப் பொற்கொடி மாதும் ஊழ்வினைப் பயனாக ஒருவரையொருவர் சந்திப்பர். அவர்கள் மனஉடன்பாட்டால் கந்தர்வமண முடித்துக் கொள்வர். உயிர்த்தோழிக்கு இது தெரியும். தலை வனின் உயிர்ப்பாங்கனும் இம்மணவியல் தெரிந்து கொள்வான். தலைவன் தலைவியை நாடிவந்து மகிழ் வான். தலைவனைக் காணாது தலைவி வருந்துவாள். ஆனால், தலைவிக்கு அதிக கவலை தோன்றும். தனது பெற்றோர்தான் காமுற்ற தலைவனுக்கு மணமுடி யாது வேறு யாருக்காவது விவாகஞ் செய்து விடு வார்களோ என்பதே கவலைக்கு முதலாகும். கற்பு வழுவாதிருக்குமாறு தலைவி, உண்ணாமலும், யாருட னும் உரையாடாமலும் இருப்பாள். காரணமிது என்பதைப் பெற்றோர் அறியார். வேலனை அழைத் துச் சாமியாடச் செய்வர். வேலன் பேய் பிடித்தி ருக்கிறது என்பான். தோழி அதைத் தடுத்துக் கூறுவாள்.

ஒருநாள் நானும் தலைவியும் பூக்கொய்யப் போயிருந்தோம். அப்போது பெருமழை பெய்தது. வெள்ளம் பெருகிவந்து எங்களை இழுத்துச் சென் றது. அப்போது, வீரம், அழகு, பெருமிதம் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நலம்வாய்ந்த ஒருவன் விரைந்து வந்து எங்களைக் காத்தான். பின்னொரு நாள் தலைவியும் நானும் பூப்பறிக்கும்போது அது எட்டவில்லை. அது கண்ட வீரன் தலைவியைத் தன் தோளின்மீது ஏற்றிக்கொண்டு பூப்பறிக்கச் செய்து சென்றுவிட்டான். இவற்ருல் தலைவி மனம் அவன்மீது பதிந்து விட்டது என்பாள். இது தோழி அறத்தொடு நிற்றல் என்ற துறையாகும். தோழி வேலனைத் தடுத்துக் கூறும் கோப இன்பவுரை சிந்திக்கற்பாலது.

கடவுளாயினுமாக
மடவை மன்ற வாழிய முருகே.

தலைவி காதலால் வருந்துகின்ருள். நீ தெய்வமாக இருந்தாலும் இருக்கலாம். இந்த விஷயம் உனக்கு அறியாமையினுலே தெரியாது என்பது. இதில் தெய்வ கோபமுண்டாகுமோ என்ற சந்தேகம் "வாழியமுருகே" என்ற புகழ்தலில் முடிகிறது.

குறிஞ்சி நிலவாணர் போற்றுங் குமரன் குன்ருத அருளாளன். அப்பெருமானை வாழ்த்தித் தலைவன் தலைவியர் நன்மணமுடித்து வாழ்வர். கலியுக வரதரான கந்தசுவாமியின் கருணைவெள்ளம் பாயாத இடமில்லை. கடவுளை நம்பாத பேர்வழிகள் கண்களுக்கு முன்னே எதுவும் புலப்படாது. இக்குமரன் சிவபிரானின் வேருகாதவர். இருபேருருவுடைய சூரனுக்கு முருகனைக் கண்டவுடன் பகை என்பதையே மறக்கும்படி செய்யும் அருள் எவ்வளவு பெரிது. நாளைக்கு இன்னது நடக்கும் என்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத அகங்காரிகள், முருகன் மாட்சி காண வல்லவராவரா ?

கோலமா மஞ்ஞைதன்னிற் குலவிய குமரன்றன்னைப் [யான்
பாலனென் றிருந்தேன் அந்நாட்பரிசிவை யுணர்ந்திலேன்
மாலயன்றனக்குமேனை வானவர்தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தியன்றோ ?

"கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்றபடி சூரனுக்கு வீரவாகுதேவர் முருகன் முழுமுதன்மை கூறினர். தம்பியாகிய சிங்கமுகாசுரன் பெரிய தத்துவ உபதேசம் செய்தான். எதுவும் பயன்படவில்லை. பரமபதியே இப்பாலன் என்பதை இப்போது உருவத் திருமேனியின் காட்சியானே சூரன் அறிய நேர்ந்தது. அறிவும் அன்பும் இன்றி மக்கள் வாழ்வது பெரிய விழலேயாம். "இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லையே," என்ற தாயுமானவர் கருத்து ஏட்டு அளவினது அன்று. அனுபவமே! "அருண்டவன் கண்ணுக் கிருண்டதெல்லாம் பிசாசு தான்." மாயாசக்தியினுலே சகல சிருட்டியும் நடக்கின்றது. பரம்பொருளான குமரன் அருளைப் பன்னுள் வழுத்தியே பெறவேண்டும். தேவர்கள் அசுரர்கள் பட்ட அவதியை நாம் அறிகின்றோம்.

குமரர் என்ற அளவிலே சுப்பிரமணியக் கடவுள் உயர்வு விளங்கும். இளம் பருவமாக என்றும் அவர் திகழ்வர். அன்றி நம்பி அனுதினம் போற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யன்பர் துயரையும் களைவார் அவரே! "என் போல் எளியவரும் எங்கெங்கும் பார்த்தாலும், உன் போல் வலியவரும் உண்டோ பராபரமே," என்ற தாயுமானவர் திருவாக்கை நோக்குக. அருணகிரி யார், குமரகுருபரர் போன்ற முருக பக்தர்கள் அன்பு பெரிது அன்றோ! செந்தமிழ்ப்பரமாசாரியர் என்று முருகப்பெருமான் புகழப்படுகின்றார். "செந்தமிழால் வைதாரையுமிங்கு வாழவைப்போன்" என்பது குமர நாயகனின் தமிழ்ப்பிரியம் தெரிவிக்கும். அகஸ்திய ருக்குப் பரமகுரு முருகனே! அருணகிரியார் "குரு வடிவாய்வந்தென்னுள்ளங் குளிரக்குதிகொண்டவே" என்றார். ஒளியினால் இருள்கெடும். அதுபோல் ஞானத்தினால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய இருள் வலிகெட்டுவிடும். ஞானம் வேலாக இருத் தலால் சுப்பிரமணியக் கடவுளுக்கு ஞானசத்திதரன் என்ற திருநாமம் உண்டாயிற்று, ஏனைய இச்சா சத்தி கிரியாசத்திகள் வள்ளி நாயகியாரும் தெய்வ யானை அம்மையாரும் ஆவார்கள். குமரநாயகனின் பேரருட்டன்மை எழுதிக்காட்டும் பண்பினது அன்று. அன்பினால் எய்த முடியாதது எதுமில்லை. வன்பாக அகங்கார அந்தகாரம் மூடச் செய்வன யாவும் கேடு பயப்பனவாகும். இறைவன் ஒருவன் என்பது உண்மைதான். அவ்விறைவன் சத்தியை அளவிட மக்களால் தேவரால் பிறரால் முடியவே முடியாது. உண்மை ஒழுக்கமே மனிதரை உயர்கதி சேர்க்கும். உலகியலில் அரசன் ஆணைவழி மக்கள் நடப்பது வெளிப்படை. இறைவனாணை வேத ஆகமங்கள் என்று முதலில் நம்பவேண்டும். எதற்கும் நம்பிக்கை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றமெறிந்த குமரன் திருவிளையாடலை அடியார்கள் நன்கு அறியலாம். நக்கீரர் முருகக்கடவுளின் பே ர ரு ள் பெற்றவர்; சிவபூசாதுரந்தரர். சண்முகமாண்பும் அருளும், அ வ ர் கூறுவதைத் தெளிந்து போற்றுவது நன்னெறிப்பாலதாம்.

மு ரு க ப் பெ ரு மா னு டை ய ஒரு திருமுகம் இருண்ட பெரிய உலகம் குற்றமின்றி விளங்கப் பல ஒளிகளை உண்டாக்கும். ஒரு முகம் அன்பர்கள் துதிசெய்ய அதற்கானவற்றை நிறைவு செய்யும், ஒருமுகம் மந்திரமுடைய வேத முறையான அந்தணர் வேள்விக்குத் தீமை தோன்ருது காக்கும், ஒரு முகம் வேதத்தின் மறைவான பொருளை ஆராய்ந்து இருஷிகள் மகிழுமாறு உணர்த்தித் திங்களன்ன தண்ணருளால் திசையெலாம் விளக்குவிக்கும். ஒரு முகம் போர்க்கு வந்தாரை மாள்வித்து, கோபித்த உள்ளமொடு போர்க்களத்தை விரும்பும், ஒரு முகம் வள்ளிநாயகியாருடன் ம கி ழ் வை ப் பொருந்தும். ஆகவே, ஆபத்தை அகற்றும் குமரநாயகனை எவ்வாற்ருனும் பண்டைய மக்கள் உவப்புடன் பணிந்தனர் என்பது தேற்றமாகும். குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமன்று. எல்லா உலகிற்கும் குமரன் முழு முதல்வரென்றுணர்ந்து அவரைப் போற்றி இன்புறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# ஐந்திணை வகுத்த செந்தமிழ் வாணர்

—:●:—

பண்டைக்கால நானில மக்கள் மேனிலை வாழ்வுடையர். அம்மக்கள் தத்தம் ஒழுக்கத்தை ஆருயிர் போல ஓம்பியவர்.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன நால்வகைத் திணைகள். பாலை முல்லையும் குறிஞ்சியும் முறைமாறித் துன்பமிகும் பண்பினது. திணை - ஒழுக்கம்.

" முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்து
நல்லியல்பழிந்து நடுங்குறு துயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங்கொள்ளும் "

என்பது சிலப்பதிகாரம்.

காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லை. இதற்குத் தெய்வம் திருமால். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி. இதற்குத் தெய்வம் முருகக்கடவுள். வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம். இதற்குத் தெய்வம் இந்திரன். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல். இதற்குத் தெய்வம் வருணன். நீரும் நிழலும் இல்லாத இடம் பாலை. இதற்குக் காளி, சூரியன், அக்கினி என்பவர்களே தெய்வங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயோன் மேய காடுறையுலகமும், சேயோன் மேய மைவரையுலகமும் என்பன முல்லை குறிஞ்சி மாநிலங்களைத் திருமாலும் மருகராகிய முருகவேளும் விரும்பித் தங்குதல் குறிக்கப்பட்டவாறும். மாயோன் கருநிறமுடையவன், முல்லை நிலமக்கள் சிறந்த செல்வமுடையவர். பசுவையே அவர்கள் பெருநிதியாகப் போற்றுபவர். முல்லை நிலத்துப் பிணியும் வறுமையும் தலைகாட்டா. ஒருவாறு ஏதும் இடர் நேரிட்டால் அந்நில மங்கைநல்லார் குரவைக் கூத்தாடுவர். குரவைக் கூத்தாவது எழுவர் முதல் ஒன்பதின்மர் வரையில் கைகோத்தாடல். குரவைக்கூத்தாடினால் நன்மழை பொழியும். மூலிகைகள் வளரும். பசுக்கள் பால் நிரம்ப நல்கும். நோய்கள் நீங்கும்.

கண்ணன், பலராமன், நப்பின்னை முதலியோரும் குரவைக்கூத்தாடியதாக அறிகின்றோம். கௌந்தியடிகள் என்ற தவமுதியாள் கண்ணகியை இடையகுலமாதரி என்பாளிடம் அடைக்கலமாக வைத்தாள். கோவலன் ஊழ்வினை உறுத்த மதுரைமா நகரில் கள்வன் என்று விசாரணையின்றிக் கொல்லப்பட்டான். இடைச்சேரியில் கெட்ட சகுனங்கள் தோன்றின. அவற்றிற்குச் சாந்தியாக ஆச்சியர் குரவை அயர்ந்தனர். ஏழுபேரை ஏழு ஸ்வரங்களாக நிறுத்திக் குரவையாடினர் என்பது சிலப்பதிகாரக் கூற்று. சில பாடல்கள் வருமாறு:—

கன்று குணிலாக் கனியுதிர்த்தமா மாயன்
இன்று நம்மானுள் வருமேலவன் வாயிற்
கொன்றையந்தீங் குழல் கேளாமோ தோழீ.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியமாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமலவுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

★

மடந்தாழ நெஞ்சகத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்காய்த் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணாவென்னு நாவென்ன நாவே,

செந்தமிழ் வாணர்கள் பாடல்களினாலே விளக்காதிருப்பின் இந்நில நல்மணம், வாழ்க்கையியல் முதலியன நாமறியும் வழி இன்றேயாம். முல்லை நிலமக்களின் வாழ்க்கைநிலை சில கூறுவாம்.

நாம் உலகில் பிறந்தோம். வளர்ந்தோம்; படித்தோம். உத்தியோகம் பார்த்தோம். பெண்டு பிள்ளைகளுடன் உல்லாசமாக வாழ்ந்தோம். பின்பு என்ன? அதுதான் தெரியாது. முன்னைப் பெரியோர்கள் மனிதரடைய வேண்டிய பெரும்பேறு இரண்டு என்பர். அகம் புறம் என்றுங்கு இருவகை நவிலல். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பாலதாகத் திருவள்ளுவர் முதலியோர் விளக்கினர். வீட்டின்பம் பெரியது. சிறிய இன்பு வாயிலானே பேரின்ப வழிகாட்டல் தமிழ் நூலார் பெருவழக்காகும். வாலறிவன் நற்றாள் தொழுதலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர் கடமை என்பது பொய்யாமொழியார் கருத்து.

அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
மும்முதற் பொருட்கு முரியவென்ப!

என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டும் விளக்கம் போற்றற்பாலதாம்.

மும்முதற் பொருளெனவே அவற்றது துணைப் பொருளாகிய அறத்தின் நிலையின்மையும், பொருள் நிலையின்மையும், இன்பம் நிலையின்மையும் அடங்கும் என்ப. உலகியற் பொருள் மூன்றனையும் இவையெனக் கூறி, அவற்றை விடுமாறு கூறவே வீடுங் கூறிற்றும் என்பதாம். தலைவனும் தலைவியும் தம்முட் கலத்தல் பிழையன்றேவெனில், அன்று. "கற்பெனப்படுவது களவின் வழித்தே" என்றுரைத்தமையே அதற்குச் சான்றும். தலைவன் தலைவியர் ஒப்புத்தன்மை பலவுள. அன்பு முன் நிற்கும். உருவும், திருவும், குலமும், குணமும், அறிவும் அன்பும் ஒத்தவர்களாகிய தலைவன் தலைவியர், பிறர் கொடுத்தலின்றித் தம்முள் அடுத்துக் கலந்து வாழ்வது நலனுடைத்தென்பர் தமிழ்மணநெறி கண்ட சீரியோர்.

ஊழ் என்பது ஒன்றில்லை. நாமே சர்வவல்லமையுடையோம் என்பாரும் உலகில் இருப்பர். தமிழ்ப் பெருநூல்கள் வாயில் வந்தன வந்தனகூறி மகிழ் வாருக்கு இடம் தரவில்லை. தாயாரும் தந்தையாரும் உனக்கும் எனக்கும் யார் யாரோ? இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியேம். செம்மை நிலத்துட்பட்ட நீர்போல அன்புமிக்க எங்கள் உள்ளம் ஒற்றுமைப்பட்டன என்று தலைவன் தலைவியர் கூறி மகிழ்வர்.

யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.

மணிவாசகனாரின் அணிவாசகம் சிந்திக்கச் சிந்திக்கத் தமிழர் மாண்பும் மணமுறையும் விளங்கும்.

வளைபயில் கீழ்கட லின்றிட
மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத்தொல்லோன் கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங்
கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல்லால் வியவேனயவேன்
றெய்வ மிக்கெனவே.

இதனால் அன்புதான் மண அணியாவது என்பதும், மணமக்கள் தம்முட் கலந்து பேசி மணமுற்றி இன்புற்று வாழ்ந்து வந்தார்கள் என்பதும், அம்முறைகளையே செந்தமிழ்க் கவி சிரேட்டர்கள் பாடலாய் யார்த்தனர் என்பதும் பிறவும் தேற்றமாம்.

இனி முல்லைத்திணைக்கு நாற்பது பாடல்கள் உள்ளன. தமிழ்மக்களுள் நாகரிக விளக்கத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லையும் தலைசிறந்ததே. கூடல், பிரிதல், ஊடல், இரங்கல் என்ற ஒழுக்காறுகள் இத்திணையில் நிகழ வன. பெரும்பொழுதுகார், சிறுபொழுது மாலை,

முல்லை நிலமக்கள் மிக்க ஊக்கமுடையவர்கள். காலில் நெருப்பு இட்டுக் காய்க்கப்பெற்றமை பார்க்க விகாரமாக இருக்கும். ஆயர்கள் காட்டிடத்தே ஆடு மாடுகள் மந்தை மந்தையாக மேய மேய்க்கும் நேரம் மர நிழலில் தங்கியிருப்பர். குழல்கள் மூங்கிலால் செய்து அவர்கள் இனிமையாக ஊதுவர். கொன் றைப் பழக் குழலுமுண்டு. பலவித இசைதோன்ற அவர்கள் சீழ்க்கையடிப்பர். பால், தயிர், மோர் விற்கும் இடைச்சியர் தமது வேலைகளைச் சுறு சுறுப் பாகச் செய்வர். வைகறைப்போதில் முல்லை நில மங்கையர் எழுந்து தயிர் கடைவர். "வெண்டயிர் கடையுமோதை கொல்புலி முழக்கமென்ன வயின்ரு றும் குளிறுமாதோ" என்ற ஒரு கவி ஓவியர் பாடலை நோக்குக.

முல்லைமாநில நங்கையரும் நம்பியரும் மன மொத்த மணமாற்றிப் பேரறமாகிய இல்லறம் பிழை யார். ஸ்ரீராமபிரானும் சீதையும் பார்வையானே இதயம் புகும்பெற்றி போன்ற திருமணமே மிகப் பாராட்டற்குரியது. கம்பர் சித்திரம் இம்பரில் இளை ஞர் வாழ்வுக்கு மிகவும் பொருத்தமானதே. அன்பே வாழ்வு. அன்பே தனயன். விருந்து புறந்தருதலே பேரறம்.

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கணங் கையும்
இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புலவர் வாயிற் புளுகு." என்று புலவரை மதியாருமுளர். தொன்னுள் மக்களின் ஒழுக்கம் கொடை வீரம் பொறை ஆகியவற்றை உள்ளவாறே படம் பிடித்துக்காட்டிய கவிஞர் மாட்சி கசடருக்கு விளங்காது. புனைந்துரை பொய்மையின் பாலது அன்று. உலகியல் நன்கு உணர்ந்த புலவர்களுக்கு இடர் புரிந்தாரும், புரிவாரும் தப்பாது துயரடைவர். புலவர் வறிஞராயினுர் அதனுல், நாம் பணமுடையோம் என்று நகைப்பாரும் ஒரு கால் நகைக்கப்படுவர். இவை நிற்க.

அகப்பொருட் தொடர்புள்ள நூல்கள் பல. அகநானூறு, கலித்தொகை. நற்றிணை, குறுந்தொகை முதலியன முல்லை நிலமக்களின் சிறப்புக்களை விளக்கமாகக்கூறும். பொதுவர், ஆயர், கோவலர் முதலியன ஆடவரைக் குறிப்பன. பொதுவியர் ஆய்ச்சியர், கோவித்தியர் போன்றன பெண்களைக் குறிப்பன. முல்லை நிலமக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிக வாழ்வு, நடை உடை நினைவு முதலியன புலவர்களாற் பாராட்டப்பட்டனவே. அன்றியும், தெய்வம், பறை, உணவு, விலங்கினம், பறவை, மரம், பறை, தொழில், யாழ், நீர்வளம், பூவகை ஆதியனவும் சீர்பெற முல்லையைச் சிறப்பிக்கும் இவற்றைக் கிரியிற் றீட்டிய ஓவியமென்னச் செந்தமிழ்ப் புலவர் செவ்விது காட்டுவர் அக்காலப் புலவர்கள். கண்ட காட்சியை உள்ளவாறே கூறினர் என்று ஆராய்ச்சியாளர் புகல்வர். சொற்களை வலிந்து இழுத்துப்பாடல் முடையும் வருத்தம் புலவர் பெருமக்களிடம் அக்காலம் காணமுடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. சொல்லும் பொருளுஞ் செறிந்து அப் புலவர்மணிகளிடம் மனக்கண்முன் வந்துகுவியும். முல்லை காரணமாக முல்லை என்றது பிழையன்று.

பாசறைக்கண் தங்கிய தலைவன் கூறுவது:—

வேந்தனும் வெம்பகை முரணியேந்திலை
விடுகதிர் நெடுவே விமைக்கும் பாசறை
யடுபுகழ் மேவலோடு கண்படை யிலனே.

தலைவியும் தான், தனித்திருத்தலை யுணர்ந்து தலைவன் வாராமைக்கு வருந்துகின்றான்.

"கூதிர் நின்றன்றாற் பொழுதே காதலர்
நந்நிலை யறியாராயினும் தந்நிலை
யறிந்தனர் கொல்லோ தாமே"

"காய்சின வேந்தன் பாசறை நீடி
நந்நோய் அறியா வறனி லாளர்." (அக. 264)

முல்லை என்ற அரியதிணைப் பண்பை புலவர் பலபடப் புகல்வர். உள்ளதை உள்ளவாறே விரித்துக் காட்டும் கண்ணாடி அகநானூறு. சுருக்கமாய் சிலகூறிக் கட்டுரையை நிறுத்துவாம்.

முல்லைத் திணைக்கு மாயனூர்மேய காடுசார் நிலமும் காரும் என்று முன்னுமுரைத்தாம். காடுகளில் கார்காலம் மழை பொழிதல் புதுமுறையன்றே. அந்நாளில் மேகங்கள் சூல்கொண்டு எழுந்து முழங்குதலும், முழக்கங்கேட்ட மஞ்ஞைகள் கரிய பெரிய கண்ணமை தோகையை விரித்து உழவர் உழவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி வயல்களிலுள்ள குருந்த மரங்களில், கிளிகள் மகளிர்போலக் கூவுதலும், ஆங்கே அக்காலமடிக்கும் வாடைக்காற்றின் நிலையும் கால இயற்கை பிறழாது, செந்தமிழ்ப் பழம்புலமைச் செந்நெறியாளர் வைப்பு நுண்மாண்புலமைத் திருவுடையார் சிந்திக்கின் அளவிலின்பம் நல்கும்.

காடுகவின் எதிர்க் கனைபெயல் பொழிதலின்
காலை வானத்துக் கடுங்குரல் கொண்மூ
முழங்குதொறும்........
காமர் கலவம் பரப்பி யேமுறக்
கொல்லை உழவர் காடுழ வொழிந்த
வல்லிலைக் குருந்தின் வாங்கு சினையிலிருந்து
கிளிகடி மகளிரின் விளிபடப் பெயிருங்கார்

* * *

தலைவன் திரும்பி வரும்போது தலைவன் குறிப்புணர்ந்து பாகன் தேரை விரைந்து செலுத்தினன். தலைவன் கேட்கின்றான்.

வான் வழங் கியற்கை வளி பூட்டி னையோ
மானுரு வாகநின் மனம் பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ!

முற்காலத்திலே இருதுபன்னனுடைய தேர்ச் சாரதியின் சாரத்தியமும் மிக வேகமானதே. மேலாடை வீழ்ந்தது எடு என்னுமளவில் "நாலாறு காதம் நடந்ததே" என்பது நோக்கத் தக்கதாம். முல்லைநில மக்கள் ஒழுக்காறு பலர்க்கும் (மற்றத் திணையாளர்க்கும்) உதவியான நிலையில் இருந்தது. தமிழ்ப் பற்றுடையார் சங்கநூல்களைக் கருத்தூன்றிக் கற்றோ கேட்டோ இன்புறுவார்களாக. செந்தமிழ் வாழ்க. புலவர் புகழ் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைமலைப் பள்ளு

—:●:—

பழைய பிரபந்தங்கள் தொண்ணூற்ருறு வகைப் படும். அவற்றுள் பள்ளு என்பதும் ஒன்று. உழத்திப்பாட்டு என்பதும் இதுவே.

தக்க பிரபுவைப் பாட்டுடைத் தலைவராக்கிப் புலவாணர் புகழுவர். "நூலறி புலவ! பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே!" என்பன நக்கீரனுர் நாமொழித் தொடர். முருகன் மயமானது தமிழ். தமிழ் மயமானவன் முருகன். கதிர்காமம் முருகனின் தலம். கதிர்காமம் பற்றிய பள்ளு கதிரைமலைப்பள்ளு

கதிரைமலைப் பள்ளில் வரும் பள்ளன் மூத்தபள்ளி இருவர் நமது ஈழநாட்டு மண்டலத்தவர். பள்ளனின் இரண்டாம் மனைவி பாரதநாட்டு நங்கை. மாவலிகங்கைப் பள்ளன், மாவலிகங்கைப் பள்ளி, பகீரதாகங்கைப் பள்ளி. இவர்கள் தங்கள் தங்கள் நாட்டு வளங்களை வளம்பெறப் புகலுவர்.

கதிரைமலைப் பள்ளில் இளைய பள்ளியால் பிரணவப் பொருளாகிய பெருந்தகை ஐங்கரன் முதன்மையும் மூத்த பள்ளியால் முன்னுவவெல்லாம் முன்னின்று முடித்தருளும் முருகன் பேரருட்பெட்பும் பேசப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் என்பது ஒளி. அவ்வொளி இருவினை ஒப்பும் மலபரிபாகமும் பெற்ற மெய்யடியாரகத்தது. "ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி" என்றும், "ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்துச்சியின் மேலளியில் விளைந்ததோ ரானந்தத் தேன்" என்றும் வருவன முருகப்பெருமான் ஒளியாய் விளங்கும் பண்பு தெளியத்தகும். கச்சியப்ப சிவாசாரியார் "சோதிப் பிழம்பதோர் மேனியாக" என்றார். முருகப்பெருமான் அக்கினி வருணர். ஞான சத்திதரராக அவர் விகசிப்பர். அக்கிநி ஜந்மநேநம: ஞாநசத்திதராய நம: என்பது நாமாவலி.

கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

இதனை முன்னரும் காட்டினும். (புற. சூத்.)

கொடிநிலை சூரியன் (வெங்கதிர்) எனவும், வள்ளி சந்திரன் (தண்கதிர்) எனவும், கந்தழி ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகி நிற்கும் தத்துவங் கடந்த பொருள் (அக்கினி) எனவும் கொள்ளப்பெறும். நச்சினார்க்கினியர், பண்டைய உரையாசிரியர்கள் இன்னவாறு எழுதி வைத்திராவிட்டால் உரை உரைந்தேயிருக்கும். அருவாகி ஒளியாகிப் தத்துவாதீதராகிக் கதிர்காமத்தில் குமரப்பெருமான் வணங்கப்படுவது இன்றும் காணலாம். முருகப்பெருமானை சைவர், வைஷ்ணவர், புத்தசமயிகள் ஆகிய யாவரும் வணங்கி வருகின்றனர். இங்கே குமார தந்திர மந்திர ஆராதனை எதுவுமில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதமுமில்லை. அன்புக்கிரியை, அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிகொண்ட குழுவினர் கூட்டம். அகங்காரப் பேயின் ஓட்டம். வினைத்திற நோயும் வறுமைப் பேயும் எம்பெருமான் சந்நிதியில் மிக்க வாட்டம். அருவத் திருமேனிகொண்ட ஆண்டவனை அனைவரும் ஒன்றுபட்டு வேண்டும் பெருநாட்டம். இவை நிற்க,

பள்ளு என்பது பாட்டுடைத் தலைவன் சிறப்பு உதாரகுணம் புகழ் முதலியன அமையவும், நாட்டு வளம் முதலியனவும் பிற சிறப்புகளும் பொதியவும் பாடப்பெறும். தெய்வத் தலைமையில் பாடும்போது அவ்வத் தெய்வங்களின் வென்றி அருள் முதல் பல அம்சங்கள் இடையிடையே மிளிரப் பாடப்படும். இக்கதிரைமலைப் பள்ளு முருகப்பெருமான் மேல் பாடப்பட்ட தேவபாணிப் பாடலாகும்.

முருகவேள் ஏனைய தெய்வங்கள் போலல்லாது முழு முதன்மை அருள் வீரம் முதலன ஒருங்கு நிறைந்த அருட்கடல். இலங்கையினன்றி—பாரத நாட்டில் படைவீடுகளாகிய ஆறு இடங்களும் பிற இடங்களும் செவ்வேள் சாந்நித்தியராக விளங்கும் பெருமை வாய்ந்திருக்கின்றன.

பள்ளுட் சில தருவாம்.

மழைபொழி வளங்கூறல்:—

கானகமிருக சாதிகள் பறவைகள்
கட்புலன் மூடி நடுங்குறவே
தேனிசைபயில் கதிரபுரி யெங்கணும்
செழுமழை மாரி பொழிந்ததுவே.

**மருத நிலத்துட் செல்லும் வெள்ளச்சிறப்பு:—**

பெருகும் புகழ்கொண்டுயர் தென்கதிரைப்
பெருமான் றனது தொண்டர்மேற்
பெருத்தகருணை வெள்ளம் போலப்
பெருகி யெங்கணு மருவியே
தருவைந் துடைய குலிசபாக
சாத னன் றனை வழுத்தியே
தாழ்ந்துமிகுந்து மருதங் கடந்து
தழைக்கு நெய்தல் புகுந்ததே.

**நெல் விளைந்திருந்த சிறப்பும் நூல்செய்தோர் பேரும் விளக்கும் பாடல்.**

மருமத்திலங்குங் கடம்பன் உயர்ந்த
வானவர்க் கருளா வானவன்
வளருங்கதிரை மலையில் வேலன்
மாவலி கங்கை வயலிலே
ஒருசொற் குரியன் முருகற் கன்பன்
உயர் குலத்தவ னுத்தமன்
உலகம் புகழு மமரர்நாதன்

**என்று வரும்.**

**இப்படியே கதிரைமலைப் பள்ளு என்னும் நூல் கதிரைமாமலை இறைவனருளைக் காட்டும். கதிரை மலைச் சிறப்பையும் சித்திரித்து நிற்கும். இதனல் முருகக்கடவுளின் செழுந்தமிழ் விருப்பு உணரலாம். அன்றி, வயல் வினைஞர் இளைப்பும் களைப்பும் தீர நற்சிந்தனையோடு இருந்தமையும் அறியலாம். சிற்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரஞானக் குழந்தையின் அருள்கொழிக்கும் பண்பை ஒருவர் பாடுகின்றார்.

முன்னம்நின் அன்னை பாலூட்டி
மையிட்டு மூக்குச் சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாளல்லவே
என்னைக் காப்பதற்கு
அன்னமும் மஞ்ஞையும் போல
இருபெண் கொண்டஆண் பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் தானோ?
(திருச்)செந் தூரி லிருப்பவனே.

பாட்டுக்குருகும் குமரநாயகனைப் பற்றுடன் பாடிப் பங்கேருகப்பதம் பணிந்து வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# அரசு கட்டிலில் துயின்ற புலவருக்கு விசிறி கொண்டு வீசிய வேந்தன்

—:o:—

பண்டைக் காலத்தில் தமிழ் நாடு பல புலவர்களைப் பெற்றிருந்தது. புரவலர்களும் யாண்டும் பொலிந்திருந்தனர்.

புரவலர் பயன் கருதாதவர்கள். தற்காலம் தமிழ்ப் புரவலர் மிக அரியர். ஆங்கிலங்கற்ற பணக்காரர் சிலர் தமிழ் என்ன என்று அலட்சியம் செய்வர். புலவரும் அன்பாகவும் பெருமையாகவும் அந்நாள் மதிக்கப்பட்டனர்.

கல்வியின் பெருமை தெரியாதவரிடம் கற்றூர் மதிப்படைய மாட்டார். நமது நாட்டில் புலவர்பட்ட வறுமைப்பிணி மிகவும் கொடுமையுடையது. எங்கே போனுலும் புலவரை உபசரித்த தண்ணளியுடையார் பெருமை கூறவும்படுமா?

சீவகன் ஆசிரியரிடம் பணிவுடன் கற்றுன் என்று அறிகின்ருேம். கற்று ஆசிரியரினுஞ் சிறந்திருப்பாராயினும் அவரை மறந்தால் குருத்துரோகம் மாளாது நின்று உறுத்தும். பழந்தமிழ்ப் புலவர் செய்ந்நன்றி மறக்காதவர். அரிய உயிர்போன்ற பாரியைக் கபிலர் எவ்வளவன்புடன் காத்தார். கிளிகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கி அயலிடங்களிலிருந்து தானியக் கதிர்களைக் கொணரச் செய்தமை புதுமையும் நன்றியுடைமையுமாம். தமக்கு உதவியவர்களுக்கு உயிரையும் தத்தஞ் செய்த புலவர்கள் மாட்சி எழுத்திலடங்குமா? நன்றி இது என்பது கூறவேண்டுமா? "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ருல் உதவியின்றி மக்கள் வாழ்வதன் அருமையும் தெரியலாம்.

வண்டமிழ்ப் புலவர் வந்திருக்கின்ருர். வாசலிற் கதவைப் பூட்டு என்ற புரவலர் இருக்கும் நாடு சிறக்காது. மனிதனை மனிதன் பார்க்க முடியாது என்பவர் பிசாசைத்தான் பார்க்க நேரிடும். உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா, இரக்கம் எப்போதும் அழியாத விளக்கு. இந்த விளக்கு அரிய பொருட் செல்வர்களின் இருதயக் குகையில் இருப்பதுதான் நன்மையாகும். திருவள்ளுவர் போன்ற தமிழ்ப் பேரறிஞர் தந்த நீதிக்கருவூலத்தில் நிதிக் கருவூலத்தவர் சிறிது நாட்டங் கொண்டால், ஆட்டம் போட்டுத் திண்டாடாமல் வாழ்வது சத்தியம்! பாரத யூனியன் அரசாங்கம் சுதந்திரப்பயன் தமிழ்ப் பாவாணர்களை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்தது. இலங்கையினும் தமிழ்ப் புலமைக் கிழவர்களைச் சன்மானித்தது உண்டு. இன்னும் தமிழன்னையை மதிப்பார்கள் என்று கருதுகின்றேம்.

ஒரு செந்தமிழ்ப் புலவர் அரசனைக் காணச் சென்ருர். அவர் மோசிகீரனுர் என்ற பேருடையார். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலாதன் என்ற அரசனைக் காண இப்புலவர் போனுர். (காரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை, ஏறப்பினேனுமில்லை) நடந்த களைப்புக் கால் தலை தெரியவில்லை. அதனால் புலவர் அரசு கட்டி லில் துயின்று விட்டார். யுத்தகாலத்துக்கு முன்பு அரசன் முரசு கட்டிலை நல்வேளை பார்த்து அனுப் புவது வழக்கம். அதில் எவரும் துயில்வது கூடாது. அரசன் வெளியிலிருந்து வரும்போது புலவர் அயர்ந்து தூங்குவதைக் கண்டான். அவன் சீற்ற மடையாது ஏற்றனா இதுவெனக் கண்டு விசிறி கொண்டு வீசினான். அன்புச் செல்வர்களே! சிந் தித்துப் பாருங்கள்! புலவர் மாண்பைத் தேருங்கள்!! உண்மைப் புலமைக்குப் பெருமை அளியுங்கள்!!!

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத் தோளோச்சித் தண்ணென
வீசி யோயே! இயலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர் நிலை யுலகத் துறையு ளின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே.

(புறநா—50)

**அரசிளங்குமாரர் சிலர் செய்ந்நன்றியை மற வாதவர்களே! துரோணர், பீஷ்மர், அசுவத்தாமா, கர்ணன் முதலியவர்கள் அறிவு மிகப் பாராட்டற் பாலது. கர்ணனுடைய அரிய கருத்தை உரிய முறையிற் காண்க. ஒவ்வொரு வார்த்தையும் அரும் பொன்னில் அழுத்திய பெரும் பிரகாச நன்மணி போன்றவைகளேயாம்.**

ஒருரும் ஒருகுலமும் மில்லா வென்னை
உங்கள் குலத்துள் ளோரில் ஒருவனுக்கித்
தேருரு மவர்மனைக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன் மணிமுடி சூட்டி யம்புராசி
நீருரும் நரபாலர் பலருங் காண
நின்னினுஞ் சீர்பெற வைத்தாய் நினக்கேயன்றி
ஏருரு மணிமுடியாய்! இந்தப் போரில்
யார்க்கினியென் னுயிர் துறப்ப தியம்புவாயே.

“செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனுயிற்
றிண்டோள்கள் வளர்த்ததனுற் செயல்வேறுண்டோ”.

**என்பவற்றைத் தமிழ்ப்பற்றுடையோர் உற்று நோக்குவார்களாக. முன் புரவலர்கள் சீறிச் சின வாது இருந்தமை சாலச் சிறந்த நெறியாகும். அதனுல்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறனையை நின்பகைவர்க்குத்
திங்களனையை யெம்மனோர்க்கு

என்று சீத்தலைச் சாத்தனுர் பாடினுர். கல்வியினுல் மட்டும் ஒருவர் உயரமுடியாது. கொடையினுல் உயரவும் முடியாது. கற்றவர் உலகியல் நன்குணர்ந்து வாழ்வதுதான் மரபு. கொடைக்குத் தண்ணளி முன்னணியில் நிற்கவேண்டும். இன்னணம் அறிவாளிகளும், பொருளாளிகளும் மல்கி ஒற்றுமையாக வாழ்ந்தால் நாடு சிறக்கும். சமூகம் பெருக்கும். மொழி திகழும். பண்டைப் பனுவல்கள் பல்கும். இவற்றைத் தமிழ் அன்பர்கள் கவனிப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# இல்லறநெறி நின்று வீடுபேறு பெற்ற வன்தொண்டர்

:O:

இந்த உலகத்தில் மக்கள் இன்பமாக வாழ்கின்றனர். மனநிறைவு அடையாதவரைப் பற்றிப் பேச்சில்லை. தமிழ்நாடு அந்நாளில் நிலப்பிரிவுகளில் மக்கள் ஒழுக்கம் வேறுபட்டிருந்தது. ஆனால், யாவரும் இல்லறம் இனிது நடாத்தியவர்களே! துறவு பூண்டார் மிகச் சிலரே.

அடியார் குழுவில் இல்லறம் நடாத்தியவர்கள் நம்மால் போற்றத்தக்கவர்களே! அரிய பிறவிப் பயனை உரிய முறையில் கைக்கொண்ட பெரியோர் மாட்சிபெரிது. செயற்கரிய செய்தவரே பெரியோர் ஆவர். சைவசமயம் வளர-செந்தமிழ் செழிக்கச் செய்தவர்களுள் வன்றொண்டரும் ஒருவராவர். வன்றொண்டரே நம்பியாரூரர், சுந்தரர் முதலிய நாமங்களையுடையவர்.

உலகமக்கள் மனம் ஒருவழி நின்று பணியாற்றப் பல பெரியோர் அவதரித்தனர். வன்றொண்டர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் தோன்றினர். அவர் குலம் ஆதிசைவ வேதியர் குலம். சடையனார் என்பது பிதாவின் பெயர். இசைஞானியார் என்பது தாயார் பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்சொற்களைச் சிவபிரானாகிய வேதியருடன் பேசியதால் நம்பியாரூரர், வன்றொண்டர் என்ற பேரைப் பெற்றார் என்பர். சிறுவயதில் நம்பியாரூரர் நல்ல அறிவும் அழகும் உடன்வளர வளர்ந்து வந்தார். அந்நகரில் நரசிங்கமுனையர் என்ற அரசர் இப்புதல்வரை அபிமான புத்திரராகப் பெற்று வேண்டுவ செய்து வந்தார். வன்றொண்டர் மணப்பருவத்தை அடைந்தார். சடையனார் தமது குலத்துக்குச் சமமான சடங்கவி சிவாசாரியார். திருமகளை மனைவியாக்க நிச்சயித்தார். மனிதர் அறிவு மிகவும் சிறியதே.

சிவபிரான் கைலாசத்தில் அணுக்கத் தொண்டராயிருந்த நம்பியாரூரரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளங் கொண்டார். வேண்டிய வேண்டிய வடிவங்கொள்ளும் சிவபிரான் ஒரு அந்தணராகத் திருமணச்சாலையை அடைந்தார். அவர் ஆங்குள்ளவர்களை நோக்கி நம்பியாரூரருக்கும் தமக்கும் ஒரு வழக்கு இருக்கின்றது என்றார்.

அப்போது சுந்தர மணக்கோலமுடைய நம்பியாரூரர் அது என்ன வழக்கு என்று கேட்டார். வந்த அந்தணர் "நீ எனக்கு அடியவன். ஆதலால் அடிமை செய்ய வரவேண்டும்" என்றனர். இது எல்லாருக்கும் பெரிய அதிசயத்தை உண்டாக்கியது. நம்பியாரூரர் பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் இல்லை என்று வாதாடினார். சிவபிரானை வேதியர் நம்பியாரூரரின் முன்னோர் அடிமை ஓலை தம்மிடம் உளது என்றார். இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடியதில் அந்தணர் காட்டிய ஓலையை நாவலூராளி கிழித்து விட்டார். உடனே அவ்வேதியர் சீற்றங்கொண்டவர் போலக் காட்டினுர். பின்பு, இவர் அம்மறையவரை "நீ என்ன பித்தனே" என்ருர். சிவபிரான் சிரித்துவிட்டு, "நீ எது சொன்னுலுஞ் சரி. அடிமை செய்யவா எனது வழக்கைத் தீர்த்தாலல்லது மணஞ்செய்ய விடமாட்டேன்." என்ருர். பின் அங்கே நின்றவர்கள் இந்த வழக்கைத் திருவெண்ணெய் நல்லூரில் போய்த் தீர்ப்பதாக முடிவு செய்தனர்.

யாவரும் திருவெண்ணெய் நல்லூரில் போய்ச் சேர்ந்தனர். அங்குள்ள முதியோர் முன் விசாரணை நடந்தது. சிவபிரானுகிய வேதியர் கூறுகின்ருர். "இவன் எமது அடியவன். இவன் முன்னேர் எழுதித்தந்த பத்திரம் எம்மிடம் இருக்கின்றது. நான் காட்டிய ஒரு ஓலையை வலிந்துபற்றி இவன் கிழித்து விட்டான். இதனுலே இவன் அடிமை என்பதை நிரூபித்து விட்டான். ஆனுலும் இவன் பாட்டன் எழுதிய மூலஓலை என்னிடம் இருக்கின்றது. அதனையும் இவன் கிழிக்காதவாறு தடுப்பீர்களேயானுல் அதனைக் காட்டுவேன்," என்று அவ்விறைவர் கூறினுர். மூல ஓலையை அங்கே அவர் காட்டினுர். பழங்கிழவர்களும் அந்த ஓலையைப் படித்துப் பார்த்துப் பார்த்து வன்ருெண்டரைப் பணிபுரியுமாறு தீர்ப்புக் கூறினர். கடைசியில் அம்மாபெருஞ் சபையினர் அம்மறையவரை நோக்கி "உமது ஊர் இந்தத் திருவெண்ணெய் நல்லூர் என்றீரே உமது வீடு எங்கே இருக்கின்றது?" என்று கேட்டனர், "இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற ஒருவருக்கும் எனது இடம் தெரியாதா? வாருங்கள் ! காட்டுகிறேன்" என்று ஆங்குள்ள ஆலயத்துட் சென்று மறைந்தருளினர். உடனே வன்றொண்டர் அவரைத் தொடர்ந்தார். சிவபிரான் அசரீரியாக "நீ முன்னே நமக்குத் தொண்டன். அதனால் உன்னைத் தடுத்தாட்கொண்டோம்".

"நீ என்றும் இத்திருமணக் கோலத்துடன் நம்மைப் பாடுவாயாக" என்று அருளிச் செய்தார். மேலும் நீ நம்மைப் பித்தன் என்று கூறியதால் நமது பெயரைப் பித்தன் என்றே பாடுதி என்று ஆஞ்ஞாபித்தார். அன்றி வன்சொற்களை என்னுடன் கூறியதால் வன்றொண்டன் என்ற பேரும் உனக்கு வழங்கும் என்று அருளிச்செய்தார்.

கொத்தார் மலர்க்குழலாளொரு கூறுயடியவர் பால்
மெய்த்தாயினு மினியானை யவ்வியனுவலர் பெருமான்
பித்தாபிறை சூடியெனப் பெரிதாந் திருப்பதிகம்
இத்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார்.

*திருச்சிற்றம்பலம்*

பித்தா பிறைசூடிப் பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ
[ ரருட்டுறையுள்
அத்தா வுனக்காளா யினியல்லே னெனலாமே.

*திருச்சிற்றம்பலம்*

இதன்பின்னர் திருத்துறையூர்முதல் பல சிவத்தலங்களை நம்பியாரூரர் வணங்கிப் பவநெறிச் செல்லாது தம்மையாண்ட பரம்பொருளைப் பாடி வருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரானுர். திருவதிகை வீரட்டானத்தில் சிவபிரானை வணங்க வன்ருெண்டர் சென்ருர். ஆனுல், அத் திவ்விய தலத்தில் அப்பரடிகள் உழவாரத் திருத் தொண்டு செய்தார் என்பதனுல், தமது பாதம் படுதல் கூடாது என்று எண்ணினுர். சித்தவட மடத்தில் நம்பியாரூரர் தங்கினுர். சிவபிரான் மூதிய ஒரு வேதியராய்த் தாமும் ஆங்கே பள்ளிகொள்வார் போலத் தங்கினுர். வன்ருெண்டருக்குத் திருவடி தீக்ஷை செய்து அவர் மறைந்தருளினுர். அப்பால் சில தலங்களை வழிபாடுசெய்த வன்ருெண்டர் சிதம்பரமேகினுர். சிதம்பர சபாநாதராகிய தேனைப் பருகும் விருப்பம் வேதவண்டுகளுக்கும் உளதாக மதித்து நாவலூராளி சென்றதைச் சேக்கிழார் வருணிப்பதை நேயர்களே சற்றுக் கவனியுங்கள்.

மன்றுளாடு மதுவின் நசையாலே மறைச்சுரும்பு
அறைபுறத்தின் மருங்கே
குன்றுபோலுமணி மாமதில்சூழும் குண்டகழ்க்கமல
வண்டலர் கைதைத்
துன்றுநீறுபுனை மேனியவாகித் தூயநீறுபுனை
தொண்டர்களென்னச்
சென்று சென்று முரல்கின்றனகண்டு சிந்தையன்பொடு
திளைத்தெதிர் சென்ருர்.

அப்பெரும்பதி ஐந்தொழில் நடஞ்செய்யும் நடராசப்பெருமான் வெளிப்பட்டுக் கண்டாரைக் களிப்புறச் செய்வது. நம்பியாரூரர் தம்வசமிழந்து மனம் சிவபிரான்பால் பதிய வழிபாடு செய்தார். பின்னும் சிவன் பதி பலவற்றை அன்பு குதி கொண்ட உள்ளத்துடன் அவர் பணிந்து செல்வாராயினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு, வன்றெண்டரை வாழ்க்கைச்சுழல் சுற்ற ஆரம்பிக்கின்றது. சிவபிரான் அருளின்படி திருவாரூரை நம்பியார் அடைந்தார். கயிலையிற் காதலித்த கமலினி நங்கையினைக்காண அவரைத் திருவருள் கூட்டுதலை நாம் நன்கு கவனிக்கவேண்டும். இங்கே தெய்வக் காதலின் தன்மையைக் காணலாம். பரவையாரும் புற்றிடங்கொண்ட புராதனரை வணங்கச் செல்கின்றார். நம்பியாரூரரும் தியாகராஜப் பெருமானை வழிபடச் செல்கின்றார். முதலில் நம்பியாரூரர் பரவையார் திருமேனியைக் கண்டு கருதுவது சிவனருளில் முடிகின்றது. அச்செய்யுளை இங்கே விளக்க இடமில்லை. பாடலை மட்டும் காட்டுவன்.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

என்பர் திருவள்ளுவர். அதன் உண்மை காட்டப் பரவையயரும், நாவலூரர் திருவுருக்கண்டு மனதில் சிந்திக்கின்றார். இச்செய்யுளும் செவ்விய பொருட் பொலிவுடையது. பின், சபாநாதப்பெருமானின் ஆஞ்ஞைப்படி வன்றெண்டர் திருவாரூர் சென்றார். பரவையாரை முன்வினைப்படி திருமணம் நடத்த நம்பியாரூரர் நம்பனருள் போற்றி ஆங்கிருந்தார். வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீகநாதப்பெருமானருளியபடி "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்பதை முதலாகக் கொண்டு திருத்தொண்டத் தொகையை நம்பியாரூரர் பாடியருளினுர். அதுவே அடியார் பெருமையுணரச் செய்தது. சேரமான்பெருமாள் நாயனுரும் சுந்தரமூர்த்திகளுக்கு அன்பராயினர். தம்பிரான்ருேழர், சேரமான்ருேழர் என்பன நாவலூரெம்பெருமானுக்கு உற்ற பேர்கள். மயிலாப்பூரில் சங்கிலியாரையும் அவர் இறையருளால் மணந்தார். சங்கிலியாருக்கு முன் விவாகம் நடக்கவில்லை. பேசப்பட்ட ஒருவர் இறந்தார். அதனுலே சங்கிலியாரை விதவை என்பது பிழையாகும். நிற்க; சுந்தரமூர்த்திநாயனுர் அவிநாசி என்ற திருப்பதியில் முதலை உண்ட பிராமணச் சிறுவனை அம்முதலை வாயினின்று அழைத்துக் கொடுத்தது பேரற்புதமாகும். பின் சேரர்பெருமானுடன் அவர் தங்கியிருந்தார். திருவஞ்சைக்களத்தில் சிவபெருமானை வணங்கும்போது பழைய நினைவு அவருக்கு உண்டாயிற்று. கைலாசபதி வெள்ளை யானையுடன் தேவர்களை அனுப்பினுர். நம்பியாரூரர் சேரமானை நினைந்துகொண்டு கயிலைக்கு எழுந்தருளினுர். சேரமான்பெருமாளும் குதிரைமீது சிவமந்திர உச்சாரணத்தினுல் சுந்தரமூர்த்திகளுடன் சென்ருர். "திருக்கைலாஞானவுலா" சேரமான் பெருமாணுயனுர் பாடியதே. கைலையம்பெருமான் அருளின்படி இருவரும் ஆடிமாசச் சுவாதி நட்சத்திரத்தில் இறையருள் கூடினர். ஆசையின் விடுதலையே வீடு ஆதலை நாம் உணர்ந்தால் பேரின்பங் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளைவாரணமீதில் இருத்துமே
மங்கைபாகரைத் தூதுநடத்துமே
மருவியாறு வழிவிட்டுநிற்குமே
செங்கல்லானது தங்கமதாகுமே
திகழுமாற்றிட்ட செம்பொனளிக்குமே
துங்கவாம்பரி சேரர்க்குநல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர்பாடலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை

—:●:—

பல நூற்றுண்டுகளுக்கு முன் பாரதநாடு சிறந்திருந்தது. சமய வரம்பும் அக்காலம் உண்டு.

ஈழநாட்டிலும் பறங்கிக்காரர், உலாந்தாக்காரர் வந்து அட்டூழியம் செய்தார்கள். அதுபோலப் பாண்டிய நாட்டில் சமணர்கள் தங்கள் சமயவளர்ச்சி நாடினர்.

அரசனெவ்வழி, குடிகளுமவ்வழி என்பர் அறிந்தோர். நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் அரசு வீற்றிருந்தான். அவன் மனைவியார் சோழராசனின் புதல்வியார், மந்திரி குலச்சிறையார் என்பவர். அரசன் சமணசமயச் சார்பினன். அது மங்கையர் நாயகமான அரசிக்கு விருப்பமில்லை. மகாத்மாஜீ போலச் சாத்வீக எதிர்ப்பை மனைவியாரும் மந்திரியாரும் கைக்கொண்டனர்.

தடுமாறு நெறியதனைத் தவமென்று தம்முடலை
யடுமாறு செய்தொழுகும் அமண்வலையிலகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறுங் கழலடைந்த
நெடுமாற னார்பெருமை யுலகேழு நிகழ்ந்ததால்.

என்று தெய்வமணக்குஞ் செய்யுள் பாடும் வன்மை பூண்ட சேக்கிழாரடிகள் அருளிச் செய்தார். ஆனுல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்குத் தீமையில்லாத வாழ்க்கை உயர்வுடையது என்பதை நாடி மனையறச் செல்வி நடந்தார். தேச மக்கள் சமயநிலை, அறமுறை வாழ்க்கை ஆதியன அடைய மங்கையர்க்கரசியார் பாடுபட்டார். மந்திரி யாரும் அரசிக்கு உதவியாயிருந்தார். முன்வினை கூட்டுமளவே அனுபவமாகும்.

அக்காலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாய னார் அவதரித்திருந்தார். மங்கையர்க்கரசியார் ஞான போனகரை அழைத்துவர ஓலை அனுப்பினர். எப் படியும் தனது நாயகன் உலகநாயகராகிய சோமசுந் தரக்கடவுளை வழிபட்டு நன்மைபெறவேண்டும் என் பதே பத்தினியாரின் சித்தம். அரசாட்சி சீருறின் தேசமக்கள் சிறப்படைவர். திருஞானசம்பந்தப் பெருமானும் அருளுடன் மதுரை சார்ந்தார். தேச பக்தர்களுக்கு வெள்ளை ஆட்சி தீங்குசெய்தது. இப் படியே தமிழ் விரகருக்குச் சமணர் தீங்கிழைத்தனர். சீர்காழிப் பெருவாழ்வுடையார் அதற்கு அஞ்சாது ஆலவாயீசனை வழுத்தி நின்றனர். தேசமக்கள் விடு தலை நாடி உழைக்கும் தெய்வப்பாவைக்கு ஊனம் வாராது முத்தமிழ் விரகர் பரவுவது சிந்திக்கத்தக்க தாம்.

"அமணர்களிட்டதீத் தழல்போய்
பையவே சென்று பாண்டியர்க்காகவே"

பாண்டிமா தேவியாரின் மங்கலநாண் நிலைநிற்க அருளிய பண்பு இதில் விளங்கும். பின்பு பாண்டிய னுக்குச் சுரம்கண்டது. சமணகுருமாரால் நீக்கமுடிய வில்லை. முன்னைவினைப் பெருங்காடகலும் நீங்குந்

1922 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணம் ஆளுடைய பிள்ளையார் திருநீறு இட்டார். காய்ச்சலும் நீங்கியது. கூனும் மாறியது. சௌந்தர பாண்டியன் என்று சாற்றத் திருநீற்றொளி பரவியது. தேசமக்கள் களிப்படைந்தனர். ஒரு மங்கையரால் பாண்டிநாடு உயர்ச்சிமேவிற்று.

ஞானத்திருவுருவமும், வேதப்பொருள் அமையச் சிவபிரான் சீர்பரவும் மாட்சியும், கண்டார் மனங்குளிரச் செய்பேரருளும் சண்பை வேந்தர்பால் மிளிர்ந்தன. சேக்கிழார் பெருமான் திருவாக்கு வருமாறு:—

"ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றிமண்ணில்
வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தினெழு பிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்."

வளவர்குல மகளார்க்கு இருந்த தேசபக்தியே நாயகனை நல்வழிப்படுத்த முன்னின்றது. சமணரைக் கழுவேற்றியது குற்றம் என்பர் ஒரு சாரார். சீகாழி விரகர் சமணரைக் கழுவேற்றவில்லை. அரசனிடம் சமணர் கூறியபடி, பின்பு அவர்கள் தீயிலும் நீரிலும் தங்கள் சமய உண்மையை நிலைநாட்டவில்லை. அரசநீதி தண்டனைக்குள்ளாக்கியது. நிற்க;

பண்டைய சங்கங்களிலும் பெண்மணிகள் அங்கமாயிருந்தனர். பாடல்கள் பல புறநானூற்றினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநூல்களினும் நாம் காணலாம். உயர்ந்த மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்ற உத்தம குணங்கள் காரிகையாரிடம் விளங்கின. அது, மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை எதிர்கொள்ளும்படி குலச்சிறையாரை அனுப்பியதிலிருந்து அறியலாம். அவருடைய கற்பின் பொற்புமுணரலாம்.

மங்கையர்க்கரசியாரைச் சேக்கிழாரடிகள் வாயாரப் போற்றுதலை அன்பர்கள் நோக்கவேண்டும்.

"மங்கையர்க்குத் தனியரசி யெங்கள் தெய்வம்
வளவர்திருக்குலக் கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத்திருமடந்தை கன்னிநாடு ஆள்
தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோ னருளினாலே
இருந்தமிழ் நாடுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப
போற்றுவார் கழலெம்மால் போற்றலாமே.

தன்னலம் பாராது தமது நாயகனும் தேசமக்களும் முன்னேற முன்மாதிரி காட்டிய உத்தமியார் என்பது தெரிவிக்க முதலில் மங்கையர்க்குத் தனி அரசி என்றார். எல்லா நலங்களுக்கும் பிறப்பு இறப்பு அற்ற பரம்பொருளை வழுத்தி முதிர்ந்த தெய்வ நலம் பழுத்தவர் என்பது தோன்ற எங்கள் தெய்வம் என்றும், உயர்ந்த அன்பு உற்ற இடத்து உதவி முதலியவற்றோடு, ஊர்தோறுஞ் சிவமணம் பரிமளிக்கவும்செய்த உத்தம சோழர் குடிப்பிறந்த வளர்குணச் செல்வியாதலின், வளவர் திருக்குலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்து என்றும், குன்ருத மங்கலத் திருவுடன் கற்பின் பொற்புள முதல்வி என்பது தெளிய வளைக்கை மானி என்றும் தோன்றிய இடத்தன்றிப் புகுந்த இடத்திலும் இலக்குமி போன்று அழகும் பிற திருவும் பொலியச் செய்யும் நல்லார் என்பது புலப்பட, செங்கமலத் திருமடந்தை என்றும், என்றும் அழியா நிலையாலும், ஸ்ரீ மீனுட்சி அம்மையார் ஆண்டமையாலும் பாண்டி நாட்டைக் கன்னிநாடு என்றும் பாண்டியர்கள் ஆலவாயீசனைப் போற்றி உருவும் திருவும் பெற்று நன்கு பரிபாலனஞ் செய்தனர் என்றும் அறிக. நெடுமாறன் அங்ஙனமின்றி எல்லாவற்றையுங் கெடுத்தான் என்ற பழிச்சொல் பரவாது பக்தா வைக்காத்த தெய்வ நங்கை என்பது விளங்க தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப் பாவை என்றும் பல அருஞ்சொல்லடை புணர்த்தி மங்கையர்க்கரசியார் புகழப்படுகின்ருர். தமிழ்நாடு சைவம் என்ற சமயம் மாறிச் சமணம் பரவத் தொடங்கியதே இடராகும். இத்துன்பகலச் சண்பையர்கோன் திருவருள் சுரக்க மூலகாரணர் மங்கையர்க்கரசியரேயாவர். அத்தெய்வப் பாவையைத் துதியாது அவரைத் துதிப்பார் கழலைப் போற்றலால் பெரும் பயன் விளைதல் கூறினுர். இன்னும் விரிப்பில் பல்கும். திருஞான சம்பந்தப் பெருமானும் சேக்கிழாரைப் பின்பற்றிப் பாசுரம் அருளிச் செய்தார். அடியாருள் மங்கையர் பலருளர். பெண்கள் தலையெடுப்பு இன்றி ஆருயிர்மாட்டு அன்பு, அடியார் பெரியோர்பால் பக்தி பொதுவான தேசப்பணி முதலியன உடையராய் நடப்பது பெரிய நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்விபாண்டி மாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால்
வேதமும் பொருள்களுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# சகோதர வாஞ்சையின் தனிச் சிறப்பு

கம்பநாடர் தமிழ்மரபு பிறழாமல் செஞ்சொல் ஆற்றொழுக்காகப் பொருந்த இன்பத்தேனூற்றாகச் செய்யுள் தந்தவர். பரதன் சிறந்த இராமபக்தன். அன்பு அறிவு அழகு பரதனிடம் அடைக்கலம் புகுந்தன. பரதனும் சத்துருக்கினனோடு இணைபிரியாதிருப்பவன். தமையனைத் தேடப் பரதன் புறப்பட்டான். சத்துருக்கினன், கோசலை சுமித்திரை கைகேயி தேர்ச் சாரதியாகிய சுமந்திரன் ஆகிய எல்லோருடனும், பரதன் இராமபக்தனை குகனுடன் ஓடமேறிப் போகிறார்கள். புண்ணிய நதியாகிய கங்கையைக் கடக்குந் தருணம்,

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுதுநோக்கி
வெற்றித்தார்க்குரிசில்! இவர் ஆர் ? - என்று
குகன்வினவ வேந்தர்வைகும் முற்றத்தான்
முதல்தேவி; மூன்றுலகுமீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தால்பெறும் செல்வம் யான்
பிறத்தலால் துறந்தபெரியாள்.

என்றான். இதில் பரதன் பணிவும் மனத்துயரும் சித்திரிக்கப்படுகின்றன. கம்பர் சுற்றத்தார் தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொடும் தொழ நின்ற கோசலை என்பது எவ்வளவு சிறப்பு அளிக்குந் தொடர்? வறிஞன் பாதுகாக்கும் பயிருள வயல்போலக் குடிகளைக் காத்த அரசர்க்கும் அரசனான தசரதனுடைய பட்டத்து அரசியாதலின் சுற்றத்தவரும், எல்லா உலகிற்கும் பிரானாகிய திருமாலைப் புத்திரராகப் பெற்றெடுத்த வயிற்றை உடையவளாதலால் தேவர்களும் தொழும் பெருமாட்சி கோசலைக்குள்ளமை வியந்துரைக்க நின்றமை காண்க. மண்ணுடைவரும், பொன்னுடைவரும் மகிழ்ந்து வணங்க ஆட்சி புரிந்த சூழ்ச்சியாளனாகிய தசரதனின் முதற் பெருந்தேவியாரைத் தெரிந்துகொள்ள விரும்பிய குகன் தனது கையால் சுட்டிக் கேட்பது முறையன்று என்று கருதிக் கேட்டான் என்பார் தொழுது நோக்கி என்றும், மன்னர்கள் பலர் மன்னி வைகும் தலைவாயிலையுடைய தசரதனின் மூத்த மனைவி என்றும், மூவுலகங்களையும் படைத்த நான்முகனைத் தமது திருவுந்தியங்கமத்தில் பெற்ற திருமாலாகிய இராமபிரானை மகனாகப் பெற்றெடுத்ததனால் அடையவேண்டிய பெரும் பாக்கியத்தை, நான் ஒரு பாவி பிறந்ததனால் துறந்து நிற்கும் பெருமையுடையவள் என்றும் குறிப்பிட்டமை தெளிக.

பரதன் இராமபிரானது தம்பியாகப் பிறவாதிருந்தால் அரசநீதிப்படி இராமபிரானே அரசாளுவார். இது மாறித் தன்பொருட்டுத் தாயாரான கைகேயி அரசனிடம் இரு வரங்களுள் பரதன் என்ற தனக்கு இராச்சியம் விரும்ப இடமிராது. சக்கிரவர்த்தியும் "மண்ணேகொள் நீ மற்றையதொன்றும் மறநீ" என்று கெஞ்சியிருக்கமாட்டார். "ஆ! இவை எல்

லாம் உண்டாக நான் ஏன் பிறந்தேன்” என்று பரதன் வருந்துகின்றான். இன்னும், கோசலையும் தனது கணவனைக் காலனுக்கு நல்கி மங்கலநாண் இழந்து வருந்த தேர்ந்திராது என்பதும், அயோத்தியாபுரி வாழ்வோர் துயர்க்கடலில் மூழ்குமாறு ஸ்ரீராமபிரான் காடு செல்லமாட்டார் என்பதும் பரதன் மனதை வருத்தின. கைகேயியின் ஆசையால் பெரும் பாக்கியமும் பேருரிமையும் கிடையாமைக்கு வருந்தாத பெருங்குணமுடையாள் கோசலை என்பது விளக்கவே “பெறும்செல்வம் துறந்த பெரியாள்“ என்று பாராட்டினான். பின் கோசலையின் வினவைக் கேட்டுப் பரதன் குகனைப்பற்றிக் கூறுகின்றான்.

என்றலுமே அடியின்மிசை நெடிது விழுந்து
அழுவானை “இவன் யார்” என்று
கன்றுபிரி காராவின் துயர் உடைய
கொடி விவை, கழற்கால் மைந்தன்
இன்றுணைவன் இராகவனுக்கு(ம்)
இலக்குவற்கும் இளையவற்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட்
குகன் என்பான் இந்நின்ற குரிசில்”.

என்றான்.

வணக்கமாகக் குகன் கேட்டதற்குப் பரதன் விடையிறுத்தான். அது கேட்ட குகன் தன்னைத் தம்பியாகக் கருதிய ஸ்ரீராமபிரானுடைய தாயார் என்பதைக் கேட்டவுடன் குகன் கோசலையின் பாதங்களில் வீழ்ந்து கண்ணீர்விட்டுப் புலம்பினான். “அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்” என்பது பொய்யாமொழியன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமபிரானுடைய தாயார் என்ற வுடன் போலிக்கண்ணீர் சொரியாது அடக்க முடியாத் தனது துக்கம் தலைக்கொண்டதனுல், கண்ணீரால் கோசலை திருவடிகளுக்கு மஞ்சனமாட்டினுன் என்பார் "என்றலுமே அடியின்மிசை நெடிதுவிழுந்து அழுவானை," என்று கம்பநாடர் கூறினுர்.

தனது இன்புக்கும் அன்புக்கும் காரணமான இளங்கன்றைப் பிரிந்த காராம் பசுவின் துயரைச் சிந்தைக்கினிய செல்வக் குமாரனைப் பிரிந்திருந்த கோசலை படும் துயருக்கு உவமைகாட்டிய நயம் நாம் மிக வியக்கத்தக்கதாம்.

இவன் யார் என்ற கோசலையின் கேள்விக்குப் பதில் கூறவந்த பரதன் தனது கண்கள் சொரியும் நீரால் தனது அகத்தில் அடங்காது பொங்கி எழும் பெருந்துயரை வெளியிடும் இவன் உமது புதல்வன் என்று முதலிற் கூறுவானுய் "இன்துணைவன் இராகவனுக்கு" என்றுரைத்தான். இராமபிரான் குகனைத் தம்பியாகவும் உயிர்த் தோழனுகவும் கொண்டருளப் பெற்றமை தெளிய, சகோதரன் தோழன் என்ற இரு பொருளும் அமைந்த துணைவன் என்று பரதன் குகனைக் குறிப்பிட்டான். கம்பர் கவி வன்மையும் காணலாம். பெண்கள் நாயகமான கோசலையின் கனிந்த அழுக்குப்படியாத மனம் இன்னவாறுரைக்கின்றது. சமபுத்தியை இதில் காணலாம்.

நைவீர் அல்லீர் மைந்தீர்!
இனித்துயரால் நாடு இறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றுமன்றே
விலங்கல் திண்டோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவீரக்களிறு அனையகாளை இவன்
தன்னோடும் கலந்து நீங்கள்
ஐவீரும் ஒரு வீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றாள்.

உலகத்தின் விரிவுக்குப் பெண்களே காரணர். இரக்க உள்ளம்மிக்க பேரரசியாகிய கோசலை தம்மை வணங்கிய குகன் ஸ்ரீராமபிரானுக்குச் சிந்தைக்கு இனிய சிறந்த தோழன் என்பதை அறிந்தவுடன், தான் பட்டமகிஷி என்றும் வேறுபாடு கருதாது அவனையும் தமது புதல்வருள் ஒருவனாக வைத்து ஆசீர்வாதஞ்செய்வது அவரது சமரச அன்புப் பெருக்கைத் தெள்ளிது புலப்படுத்தும். உண்மையான தூய அன்புடைய குகனைச் சகோதரனாகப் பெற்றதால் துன்பம் என்பதே உண்டாகமாட்டாது என்றும் கோசலை கூறினார். வீரவில் தாங்கிய இராம இலக்குமணர்கள் நாட்டைத் துறந்து காட்டை நோக்கிச் சென்றது என்று அன்பிற்குரிய நால்வரில் இருவரை இழந்து வருந்த நேர்ந்தது. அது நான் எண்ணிய படி தீவினையாகாது நல்வினைப் பயன்தந்தது. இராம இலக்குமணர்கள் ஆரணியத்தை அடையாதிருந்தால், இன்று கண்டு களிப்படைய நின்ற இவ்வீரனை ஐந்தாவது திருமகனாகப் பெறமுடியாமற் போய்விடும். வனத்தில் கிடைத்த தோழனைத் தம்பியாகக் கருதக்கூடிய கருணை இராமபிரானுக்கு இருந்ததுபோலவே, அப்பெருமானைத் திருவயிற்றில் தாங்கப் பெருந்தவமிழைத்த கோசலாதேவி, அன்பிற் சிறந்த குகனை வேடனாக மதியாது மைந்தனாகக் கருதியமை பாராட்டக்கூடிய சமபுத்தியேயாகும். இன்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறந்தானே என்கின்ற அயல் நின்ருள்தனை
நோக்கி ஐய! அன்பின்
நிறைந்தானை உரையென்ன நெறி திறம்பாத்
தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும் தொழுதுலமாம்
இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்தனைப்
பயந்த பெரியாள் **என்ருன்.**

கைகேயியின் சூழ்ச்சியால் கோசலாதேவி மன வருத்தத்துடன் காடுசெல்ல விடை கொடுத்து அனுப்புகின்ருர். தசரதனுகிய கணவனுடைய ஆஞ்ஞை எதுவுமின்றி, அன்பு குதிகொண்ட உள்ளத்தால், ஸ்ரீராமனுக்குத் தவத்துணையாவாய் என்று இலக்குமணப் பெருமானை உடன் அனுப்பிய வீரத் தாய் ஆதலின் சுமித்திராதேவியை "அறந்தானே என்கின்ற" என்று இங்கே விசேடித்துரைத்தார். கைகேயி தான் செய்த கொடுஞ்செயலே தனது உள்ளத்தைப் பிளக்கத் தூரத்தே நின்ருள். சுமித்திரை கோசலையின் சமீபமாக நின்ருள். "அயல் நின்ருள்" என்ற கம்ப சித்திரம் இன்பூட்டுவதாகும். சுமித்திரையின் அன்பு அமைந்த மனச் செவ்வி நாடி "அன்பினுல் நிறைந்து நிற்கும் இவ்வனிதையை இன்னுர் என்று புகல்வீராக" என்று குகன் பரதனை வேண்டினுன். தசரதரானவர் இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்த வருத்த நிலையில் சத்தியத்தைக் காப்பதே துணிபாக, உடலைத் துறந்துபோன பேரறிவுக் களஞ்சியம் என்பது நன்கு விளங்குமாறு "நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்" என்ற பரதன் திருவாக்கு நலம் போற்றற் பாலதாம். எல்லாவுயிர்களுக்கும் இறையாய், எல்லா வுயிர்களும் வணங்கும் முழு முதன்மையுடையராய் உள்ள ஸ்ரீமந் நாராயணனே இராமனாக அவதரித்துள்ளார் என்பது தெளிய "யாவர்க்குந் தொழு குலமாம் இராமன்" என்று சூசிக்கப்பட்டது. இராம பிரானை விட்டுப்பிரியாது குடையாய், பாதுகையாய், இருக்கையாய், சயனமாய் விளங்கும் ஆதிசேஷ அவதாரமே இலக்குமணப் பெருமாள் என்பது காட்டப் "பிரியாதான்தனைப் பயந்த பெரியாள்" என்று அரும்பொருள் தொனிப்பதைப் பார்க்க, கைகேயியின் பண்ணுட் சிந்தனை பலித்ததைப் பின்வரும் பாடல் தெரிக்கும்.

சுடுமயானத் திடை தன்துணை ஏக
 தோன்றல் துயர்கடலி னேக
கடுமையார் கானகத்துக் கருணையார் கலியேக
 கழற் கால் மாயன்
நெடுமையா லன்ற ளந்த வுலகெல்லாந்
 தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தானை யாரிவ ரென்றுரை
 என்னக் குரிசில் கூறும்.

தனது நாயகரினும், மங்கலநாணினும், பெரிதாக மதித்துப் பக்தாவைச் சுடுகாட்டுக்கு அனுப்பி இராச்சியம் வேண்டிய மதியிலி கைகேகி என்பார் "சுடு மயானத்திடை தன் துணை ஏக", என்றார். பரதன் இராமபிரானிடம் அளவுகடந்த அன்பன் என்பதை அறிந்திருந்தும், தனது புதல்வனாகிய பரதன் துயர்க்கடலில் மூழ்குமாறு செய்த கைகேயியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுஞ்செயல் தோன்ற "தோன்றல் துயர்க்கடலின் ஏக" என்றார். ஸ்ரீ ராமபிரான் காடுசெல்ல வேண்டும் என்ற சொல் கேட்ட அளவிலே அவர் முகம் அன்றலர்ந்த தாமரை மலரை வென்றது. ஆனாலும் செங்கமல மலரன்ன திருவடிகள் காட்டில் கரடுமுரடான கல் முள் முதலியவற்றில் பட்டுச் சிவக்க, அன்பின் பசை ஒருசிறிதும் இல்லாது, கருணை வள்ளலுக்கு மரவுரி நல்கிய கொடுமனமுடைமையை விளக்கவே "கடுமையார் கானகத்துக் கருணை யார் கலி ஏக" என்றார் கம்பர். வசிட்டர் போன்ற பெரியோர் அருளிய சீரிய உபதேசங்களைக் கேளாது மனத்தில் பன்னாள் நினைந்து புரிந்த கொடுமையை, "தன்மனத்தே நினைந்துசெயும் கொடுமை" என்பதனால் கம்பர் குறிப்பிட்டார். மாபலிபால் சென்ற திரிவிக்கிரமாவதாரத்தில் உலகை ஓரடியால் அளந்த திருமாலின் நெடுமையை அறிந்திருந்தும் கைகேயி தனது மனந்துணிந்து கொடுமையால் அளந்துவிட்டாள் என்று கம்பர் காட்டிய கவிநயம் மிக்க இன்பந்தருவதாம். திருவிக்கிரமப் பெருமானுடைய திருவடிகள் மண்ணுலகும் விண்ணுலகும் பரவிய பான்மைத்தாக கைகேயி ஆற்றிய கொடுமையும் வானும் நிலனும் அறியப் பரந்தது என்பது கருத்தாகும். பரதன் தனது தாயைப்பற்றிக் கூறுவதைக் கவனித்தால் சகோதர அன்பும் தனது மனவருத்தமும் உள்ளவாறே வெளிப்படுதல் காணலாம். பிறர் கெடுவது மகிழ்ச்சியாக வாழ்வார் இன்றும் உளர்.

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படரெலாம் படைத்தாளை பழிவளர்க்குஞ் செவிலியைத்தன்
பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும் உயிர்ப்பாரங்
குறைத்து தேய
உடரெலாம் உயிரிலா வெனத்தோன்றும் உலகத்தே
ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலே யேலிங்நின்ருள்
என்னை ஈன்ருள்.

நீதி தவருமல் நில அரசுபுரிந்த தசரத சக்கர வர்த்தியின் உயிர் நீங்கச்செய்தும், அருள்மிக்க தூய உளத்தினராகிய இராமபிரானை அரசு துறக் கச்செய்தும், உலகிலுள்ளார் யாவரையும் கொடிய துயர்க்கடலில் ஆழ்த்திய புண்ணியவதி கைகேயியே. 'படரெலாம் படைத்தாள்' என்று கூறப்பட நின்ருள். பெண்மணிகளுக்குள்ள இயல்பான இரக்கத்தைக் கைவிட்டும், உலகினரின் நிந்தனைகளை மதியாதும் தனது பிடிவாதத்தால் பழிவளர்த்துவரும் பண்பு டைமையால், "பழிவளர்க்கும் செவிலி" என்ருர். பீதாம்பரமணிந்து பிருதிவியை ஆளவேண்டிய அரசிளங் குமரனை மரவுரிபூண்டு கானகம் புகும்படி செய்யத் துணிந்ததனுலும் பழிவளர்க்குஞ் செவிலி யானுள் கைகேயி,

இன்னேரன்ன கொடுங்குணமுடைய கைகேயி யின் தீத்திறமமைந்த பாழ் வயிற்றிலே, கொடுமை நன்ருக ஊறப் பன்னிரு திங்கள் கிடந்த எனது உடலும் இவளது கொடுமையைச் சகிக்கமுடியாது மிகவும் மெலிந்து தேய்ந்தது என்ருல், ஏனையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிவு தானேவிளங்க "பாழ்த்த பாவிக் குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும் உயிர்ப்பாரங் குறைந்து தேயு" என்று பரதன் வெளியிட்டான் என்க. தமையனாகிய இராமபிரானை விட்டுப் பிரிந்திருக்க முடியாது தனது நிலையை "உயிர்ப்பாரம்" என்று அவன் கூறினான். ஸ்ரீராமபிரான் எல்லாவுயிர்களுக்கும் அந்தராத்துமாவாக இருப்பதையும் இத்தொடர் தெரிவிக்கும்.

அறநெறி மாருத அரசனும், அன்பு குன்ருத அகத்தினனான இராமபிரானும் தம்மைவிட்டுப் பிரிந்தமையால் உலகினர் யாவரும் உயிரற்ற உடல் போலாயினர். அதுமட்டுமா? எல்லையற்ற துயரமும் வருத்த நிற்கின்றனர் அங்கே நிற்கும் ஒருத்தி மட்டும் துன்பக் குறியின்றிக் காணப்படுகின்ருள். துயரம் இல்லாத முகமுடைய அவளே துர்ப்பாக்கியவானான என்னைப் பெற்றெடுத்த தாய் என்று குகனுக்குப் பரதன் கூறினான். பரமபக்தனான குகன் இவைகளைக்கேட்டு அயல் நின்ற கைகேயியையும் வணங்கினான். இவர்கள் ஏறியிருந்த தோணியும் கங்கைக் கரையை அடைந்தது. நல்லாரை வருத்திய அரக்கர் அழியவும், இராமாமிர்தமான திவ்விய மங்கள சத்சரிதம் நாடிநாடி மகிழவும் ஒருவழியில் கைகேயி முன்னின்றமை தேரலாம். பிறசமயம் நேர்ந்துழி வரும். சுபம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

192 R.C

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 7 | விட்டார் | விட்டால் |
| 61 | 25 | தான் | நான் |
| 67 | 7 | வெல்கெழு | வேல்கெழு |
| 79 | 22 | பறை என்பதைத் தவிர்க்க | |
| 80 | 25 | உழவர் என்பதன்முன் ஆடுதலும் உள. என்று சேர்க்க. | |
| 81 | 1 | கிளிகள் | கிளிகடி |
| 81 | 1 | நீங்கி | நீங்கிய |
| 105 | 24 | பெருமானும் | பெருமானை |
| 105 | 24 | சேக்கிழாரை | சேக்கிழாரும் |
| 108 | 23 | குகன் | கோசலை |

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
120857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org